நம்பிக்கையான மங்களத் தொழிலை கொண்ட தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77. செட்டியார் தெரு கொழும்பு-11.
டெலிபோன் 422839 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6536 1990 மார்ச் 12 திங்கட்கிழமை ★ ★ ★ දිනපති

தூய்மையான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
Ambiga
EWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

செயலாளர்களையும் அழைத்துக் கொண்டு

# வரதர் குடும்பத்தோடு வெளிநாடு சென்றார்

## இந்திய விமானம் ஒன்று திருகோணமலையிலிருந்து ஏற்றி சென்றது

### ஒன்றும் தெரியாது என்கிறது இந். தூதரகம்

எல் தம்பிராஜா

திருகோணமலை, மார்ச் 11

**வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அண்ணாமலை வரதராஜப்பெருமாளும் அவரது மூன்று செயலாளர்களும் குடும்பத்தாருடன் இந்திய விமானம் ஒன்றில் ஏறி நாட்டை விட்டுச் சென்றனர்.**

நேற்றுக்காலை ஏழு மணிக்கு இவர்கள் அனைவரும் சீனக்குடா விமான நிலையத்திற்கு சென்றனர், அங்கு தயாராக இருந்த இந்திய விமானத்தில் ஏறி சென்றனர்.

திரு வரதராஜப்பெருமாளுடன் அவரது செயலாளர் டாக்டர் விக்னேஸ்வரன், இணைப்புச் செயலாளர் வீ வேதநாயகம், அந்தரங்கச் செயலாளர் திரு ஏ பீட்டர் ஆகியோரே தத்தமது குடும்பத்தார்களுடன் சென்றவர்கள் ஆவார்கள்.

முதல்வர் வரதராஜப்பெருமாள் இந்திய விமானத்தில் சென்றது தொடர்பாக கொழும்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தமக்கு எதுவும் தெரியாது எனக் கூறி விட்டனர்.

நேற்று முதல்வர் நாட்டை விட்டு செல்லும் முன்னர் நகரில் இருந்த ஈ பி ஆர் எல் எப் முகாமகளையும் மூடும்படி உத்தரவிட்டார்.

இத்தவேளை திருகோணமலை நிலைமை குறித்து ஆராய வடக்கு, கிழக்கு ஆளுநர் லெப்டினட் ஜெனரல் நளின் செனவிரட்ன இன்று அவசரமாக அங்கு செல்கிறார்.

இன்று மாலை அவர் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி திரு ... நிலைமையை எடுத்துக் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-மு-288)

சோமண்ணை



சனி இந்த 20ஆம திகதி வீடு மாறுகிறதோட பலரை நாடு மாற வைக்குது போலை!

ஜனசக்தி உதவி பெறுவோருக்கு

## குறைந்த செலவில் கடன் அடிப்படையில் மின்சாரம் கிடைக்கும்

கொழும்பு மார்ச் 11

ஜனசக்தி உதவி பெறுவோருக்கு குறைந்த செலவில் கடன் அடிப்படையில் மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்படும்-

இதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை எடுத்துள்ளது-

கிராமிய மின்சார வழங்கல் திட்டத்தின் கீழ் ஜனசக்தி உதவி பெறுபவர்களுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்பட இருப்பதாக சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

மின்சாரம் வழங்குவதற்கு தேவையான நிதியை மின்சார சபை வழங்கும்- இப் பணம் ஐந்து வருட காலத்தில் அறவிடப்படும்- (உ-மு)

## அஸீஸின் 51 வருட சேவை: ஆஸி. தூதுவர் பாராட்டு

— நூருல் அயின் ஹுசைன் —

கொழும்பு, மார்ச் 11

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ அஸீஸ் 51 வருடங்களாக ஆற்றிவரும் சேவையை இலங்கையில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவர் திருமதி டோனியா சாண்ட் வெகுவாகப் பாராட்டினார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மாதர் அணி நேற்று முன்தினம் கொழும்பு தெமட்டகொடை வீதியில் உள்ள வை எம் எம் ஏ மண்டபத்தில் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடியது,

அந்தக் கொண்டாட்டத்தின் போது ஜனாப் அஸீஸின் 51 வருட கால சேவைக்காக அன்னாருக்கு பொன்னாடை போர்த்தும, மலர்மாலைகள் அணிவித்தும அவரைக் கௌரவித்தது.

அப்போதே விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஆஸ்திரேலியத் தூதவர் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜ தொ காங்கிரஸின் மாதர் அணியின் சார்பில் மாதர் அணித் தலைவி திருமதி ... (ஜே பி) ஜனாப் அஸீஸுக்கு பொன்னாடை போர்த்து அன்னாரைக் கௌரவித்தார்,

அதனைத் தொடர்ந்து மலையகத்தைச் சேர்ந்த ஜ தொ கா மாதர் அணிகளின் சார்பில் மாதர் சங்க உறுப்பினர்கள் தலைவர் அஸீஸுக்கு மலர் மாலைகளை அணிவித்து தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்,

இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய தூதுவர் திருமதி கணேசன் (படம 2ஆம பக்கம)

(2 ஆம பக்கம பார்க்க)



மாள் இந்திய விமானத்தில் சென்றது தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக

இன்று மாலை அவர் கொழும்பு திரும்பியதும ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசாவை சந்தித்து



## மட்டக்களப்பில் ஆள் கடத்தல்

கொழும்பு மார்ச் 11

மட்டக்களப்பில் இனந்தெரியாத மூன்று ஆயுதபாணிகளால் மணியம நாகமணி என்பவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

தகவல் திணைக்கள அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும கூறப்பட்டிருப்பதாவது—

அதிரடி பொலீஸ் படையினர் மொனராகலையில் தீவிரவாத சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

மாத்தறையில் ஆயுதமதாங்கிய இரண்டு நபர்கள் கோட்டபொல தோட்டத்தில் இருந்து 89 ஆயிரம ரூபாவை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து நடந்த தேடுதலின் போது தீவிரவாதிகளின் முகாம ஒன்றைப் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்தனர்.

பிரஸ்தாப முகாமில் இருந்து ஐந்து துப்பாக்கிகளையும றிவோல்வர் ஒன்றையும மீட்டனர்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ—மு]

பூண்டுலோயாவில்

## வீட்டில் புகுந்து இருவர் சுட்டு கொலை

கொழும்பு மார்ச் 11

இனந்தெரியாத ஐந்து பேரைக் கொண்ட கோஷ்டி ஒன்று பூண்டுலோயா பகுதியில் உள்ள வீடொன்றில் புகுந்து இரண்டு பேரை சுட்டுக் கொன்றது.

எம என் எஸ் சதாசிவம எஸ் மாதவன் ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

தகவல் திணைக்களம வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ—மு]

## நிட்டம்புவை கொலை: 100 பேர் வாக்குமூலம்

கொழும்பு மார்ச் 11

நிட்டம்புவையில் 12 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டு காட்டில் புதைக்கப்பட்ட சமபவம் தொடர்பாக இதுவரை 100க்கும அதிகமானவர்களிடம இருந்து இரகசிய பொலீஸார் வாக்குமூலங்களை பெற்றுள்ளனர் இச் சமபவத்துடன நெருங்கிய

(2 ஆம பக்கம பார்க்க)

முஸ்லிம கல்வி மாநாட்டு வெள்ளி விழா அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்கு பண்டார ஒரு மாணவனுக்கு விசேஷ பரிசு வழங்குவதையும அருகில் சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது நிற்பதையும முதலாவது படத்தில் காணலாம. மற்றப் படத்தில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதியினர்.

[உ]

## எயிட்ஸ் நோய் கர்ப்பிணியால் பிரச்சினை

கொழும்பு மார்ச் 11

எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும கர்ப்பிணி தாய்க்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக சுகாதார அமைச்சு உலக சுகாதார நிறுவனத்திடம ஆலோசனை கோரி இருக்கிறது.

பிரஸ்தாப கர்ப்பிணி இம மாத இறுதிக்குள் மகப்பேற

(2 ஆம பக்கம பார்க்க)

## 300 மௌலவி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

### முஸ்லிம் கல்வி மாநாட்டில் கல்வி அமைச்சர் தகவல்

— எப் எம பைரூஸ் —

கொழும்பு, மார்ச் 11

300 மௌலவி ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கம தீர்மானித்து விட்டது, கல்வித் துறையில் முஸ்லிமகளுக்கு உரிய பங்கு வழங்கப்படும.

கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்குபண்டார இவ்வாறு கூறினார்.

அகில இலங்கை முஸ்லிம கல்வி மாநாட்டின் வெள்ளிவிழா கொண்டாட்டம் தொடர்பான சமபிரதாயபூர்வ அங்குரார்ப்பண வைபவத்தில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மருதானை ஸாஹிராக் கல்லூரி கபூர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம மது தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரமபமாகின.

அமைச்சர் லொக்குபண்டார தொடர்ந்து பேசியதாவது—

முஸ்லிம மகளிர் கல்வித்துறையில் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

முஸ்லிம செல்வந்தர்கள் முஸ்லிம பெண் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும.

முஸ்லிம ஆசிரியர்களின் நியாய பூர்வமான உரிமைகள் வழங்கப்படும.

பதவி உயர்வுகள், நியமனங்கள் போன்றவற்றில் முஸ்லிமகளின் இன விகிதாசாரம சரியான முறையில் கடைப்பிடிக்கப்படும,

முஸ்லிம ஆசிரியர்கள் அரபு மொழியைக் கற்க வேண்டும, அதற்கு அரசு உதவி செய்யும,

8ஆம் ஆண்டுக்கும ஒரு புலமைப்பரிசில் பரீட்சை நடத்த இருக்கிறோம.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடையாதோருக்கு மற்றும் ஒரு சந்தர்ப்பத்தை அளிப்பதற்காகவே 8ஆம ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பணக்காரர்களின் பிள்ளை

(2 ஆம பக்கம பார்க்க)

## பல்கலை ஆராய்ச்சிக்கு நிதியம் அமைக்கப்படும்

கொழும்பு மார்ச் 11

சகல பல்கலைக்கழகங்களினதும நன்மை கருதி ஆராய்ச்சி நிதியம ஒன்றை இவ் வருடத்தில் ஆரமபிப்பதற்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த நிதியத்திற்குத் தேவையான பணம ஜனாதிபதி நிதியத்தில் இருந்தும வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்தும பெற்றுக் கொள்ளப்படும.

பல்கலைக்கழக மாணவர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுமபோது அவர்களுக்குத் தேவையான பணம இந்த நிதியத்தில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும.

(உ—மு)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# ஆயுத பலத்தில் நம்பிக்கையில்லை

# அகிம்சை வழியில் தீர்வு

## மலையக மக்கள் நல்வாழ்வுக்கு

## மேலும் உதவி: நுவரெலியாவில் ஜனாதிபதி

நுவரெலியா, மார்ச் 10

நாட்டில் சாந்தியும சமாதானமும நிலவ ஆயுதமும, பலாத்காரமும உதவாது. அகிமசை வழியே இதற்கு உதவும். தற்போதைய நிலைமைக்கு தீர்வு காண, நானும ஆயுத பலத்தை நமபவில்லை.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு கூறினார்.

நுவரெலியா ஸ்ரீ லங்காதீஸ்வரர் ஆலயத்தில் பிரமம காயத்ரி யாகம அணமையில் நடந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீ லங்காதீஸ்வரர் ஆலய தாபகரும, காயத்ரி சித்தருமான ஆர் கே முருகேசு சுவாமிகள் இந்த யாகத்தை நடத்தினார்.

சுவாமி பூரணானந்தசிரி. சிவஸ்ரீ ராஜப்பா சிவாச்சாரியார் உட்பட பதினைந்துக்கும மேற்பட்ட சிவாச்சாரியார்கள் இந்த யாகத்தில் பஙகேற்றனர்.

இங்கு ஜனாதிபதி தொடர்ந்து கூறியதாவது—

அமைச்சர் திரு தொண்டமான் ஆயுதத்திலும, பலாத்காரத்திலும நமபிக்கை வைக்கவில்லை. அவர் ஜனநாயக ரீதியில் பல அகிமசை போராட்டஙகளை நடத்தி மலையக மக்களுக்கு உரிமைகள் பலவற்றை பெற்றுக் கொடுத்தார்.

1983ஆம ஆண்டிற்குப் பிறகு நாட்டில் பல்வேறு இடஙகளில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகின. நாம யுத்தம செய்தோம. பேச்சுவார்த்தை நடத்தினோம. அடிக்கு அடி கொடுத்து பார்த்தோம. இதனால் வெளி நாட்டு சக்திகளே இடம பிடித்துக் கொண்டன.

வடக்கு – கிழக்கு மாகாணஙகளில் நடந்த 17 வருட யுத்தம இப்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. புலிகள் இயக்கத்தினரை பேச்சுவார்த்தை மூலமும, அன்பின் மூலமும ஜனநாயக வழிக்கு கொண்டு வந்துள்ளோம—

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும போது மலையக மக்கள் எந்தவிதமான பேதமுமின்றி எனக்கு முழு ஆதரவும வழஙகினார்கள்.

எனது வெற்றிக்கு பின்னர் நான் அவர்களின் எண்ணஙகளை உணர்ந்தேன். அதற்கமைய அவர்களுக்கு பல வருட காலமாக கிடைக்காது இருந்த உரிமைகளை வழஙகினேன். அவர்களின் நல்வாழ்வுக்காக இன்னும உதவுவேன்.

சமய சடஙகுகளில் கலந்து கொள்வதன் மூலம இரு நன்மைகளைப் பெற முடியும. ஒன்று மனதில் நல்ல எண்ணஙகளை உருவாக்கிக் கொள்ளலாம. மற்றையது மற்றவர்களின் கெட்ட எண்ணஙகளை நீக்கி நல்ல எண்ணஙகள் மனதில் எழச் செய்யலாம.

மனிதர்களை மாற்ற வேண்டுமானால் அவர்களின் உடலில் தாக்கஙகளை ஏற்படுத்தக் கூடாது. மனதில். எண்ணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

இவ் வைபவத்தில் கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு சிரிசேன குரே, போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி ஆகியோரும உரையாற்றினர்.

(இ—மு)

### நீட்டம்புவை...


(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும ஆறு பேர் எந்த நேரத்திலும இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்படுவார்கள் என பொலீஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

இக் கொலை சமபவஙகளில் சுமார் 15 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று ஈடுபட்டதாக கூறப்படுவது குறித்து இரகசிய பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்—

இச் சமபவத்தை அடுத்து கிராமத்தை விட்டு வெளியேறிய பலர் மீண்டும திருமபி வந்து இரகசியப் பொலீஸாருக்கு வாக்குமூலம அளித்திருப்பதாகவும கூறப்படுகிறது—

(உ—மு)



கொத்மலை புதிய நகரத்தை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச திறந்து வைத்த போது எடுத்த படம. அருகில் அமைச்சர் திரு காமினி திசாநாயக்கா காணப்படுகிறார். (உ—இ)

### அஸீஸின் 51...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

திருமதி கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினார், மாதர் அணி தலைவி திருமதி நல்லசெல்வம, தனது சர்வதேச மகளிர் தினச் செய்தியை வாசித்தார்.

திருமதி நல்லசெல்வம தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் ஆரமபத்தில் மாதர் சஙகத்தைச் சேர்ந்த இராம சகோதரிகள் தேசிய கீதம இசைத்தனர், ஆஸ்திரேலிய தூதுவர் திருமதி டோனியா காணட், ஜனாப் அஸீஸ், மற்றும் பலர் குத்து விளக்கேற்றி விழா நிகழ்ச்சிகளை சமபிரதாய பூர்வமாக ஆரமபித்து வைத்தனர்.

இவ்விழாவில் ஜனாப் அஸீஸ் பேசுகையில் சாதாரண மக்களின் அன்பும ஆதரவுமே தமது 51 வருட சேவைக்கு ஊக்கம அளித்தன என்றார். பாராட்டுக்கு நன்றியும தெரிவித்தார்.

[illegible] களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே எமது ஜனநாயக தொழிலாளர் காஙகிரஸ் பாடுபடுகிறது

இப்படி ஜனாப் அஸீஸ் தனதுரையில் குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலிய தூதுவர் திருமதி டோனியா காணட் தமது உரையில் கூறியதாவது—

ஜனாப் அஸீஸ் மலையக மக்களுக்காக 51 வருட சேவை புரிந்ததையிட்டு குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன், அவருக்கு எனது பாராட்டையும நன்றியையும தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் மாதர் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறையுடையவள்.

தொழிற் சஙகஙகள், மாதர் அமைப்புகள் என்பன அரசை வலியுறுத்தி பெண்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும, பெண்களின் உரிமைகளைப் பெற [illegible]



சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தில் ஜனநாயக தொழிலாளர் காஙகிரஸ் மாதரணியினர் மேற்படி காஙகிரஸ் தலைவர் ஜனாப் ஏ அஸீஸின் 51 வருட காலச் சேவைக்காக அவருக்கு பொன்னாடை போர்த்தும, மலர் மாலைகள் அணிவித்தும அவரைக் கௌரவித்தனர். ஜனாப் அஸீஸ் நன்றி தெரிவித்துப் பேசுவதையும, அருகில் ஆஸ்திரேலியத் தூதுவர் திருமதி டோனியா காண்ட், ஜ தொ கா நிதிச் செயலாளர் ஜனாப் அஷ்ரப் அஸீஸ் ஆகியோர் வீற்றிருப்பதையும படத்தில் காணலாம.

(படம: ரஞ்சித் பத்மசிறி) (உ—வ)


## இன்றைய திரைகளில்

7 வது வாரம

கெப்பிட்டல்

(கொழுமபு)

2-30, 6-00, 9-30

லிடோ

(யாழ்நகர்)

10-30, 2-00, 6-00

பிரபு - அமலா

சிறுவன் மீனராஜ் நடித்த


### இலக்கிய சந்திப்பு

கண்டி மார்ச் 11

திரு அனதோலி பார்பரா திரு வியக்கிஸ்லாவ் குப்ரியானோவ் ஆகிய இருவரும ரஷ்யாவிலிருந்து இலஙகைக்கு வருகைதந்துள்ளனர்- இவர்களுடனான இலக்கியச் சந்திப்பு ஒன்று நாளை 13ஆம திகதி கண்டி ஈ எல் சேனநாயக்க சிறுவர் நூலக அரஙகில் நடைபெறவுள்ளது- மலையக கலை இலக்கியப் பேரவையின் ஆதரவில் இச் சந்திப்பு நாளை 4-00 மணிக்கு இடமபெறும்-

[இ—017]


தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம

47, முத்தையா வீதி,

கொழுமபு—2—

திரு அப்பையா சிவசோதிலிங்கம அவர்களுக்கு தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வழஙகப்பட்ட எம எல் 5332 எனும இலக்கம கொண்ட ஆயுள் காப்புறுதி பத்திரம காணமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது- இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஆட்சேபம ஏதும கிடைக்காவிட்டால் பிரதி காப்புறுதி பத்திரம ஒன்று வழஙக நடவடிக்கை எடுக்கப்படும- எஸ் ஏ எச் மொகிதீன்

ஆயுள் முகாமையாளர்

031536



திருகோணமலை

மாவட்ட

நீதிமன்றத்தில்

பின்னுறுதிக்

கட்டளை

ஓ எல் எம இஸ்மாயில் சட்டத்தரணி, திருகோணமலை—

சொத்துரிமை தொடரல் வழக்கு இலக்கம- 621-

சாமபல் தீவைச் சேர்ந்த மத்தியூஸ் தியாகராஜாவின் இறுதி உயில் தொடர்பானது-

— காலஞ்சென்றவர்

செல்லையா அருள்பத்திநாதன், 84, பவர் ஹவுஸ் வீதி, திருகோணமலை-

— மனுதார்

மேற்குறிப்பிட்ட காலஞ்சென்றவரால் 29 அக்டோபர் 1983 திகதியிடப்பட்ட இறுதி உயில [illegible]

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

## பூ...
## பூவா
## பூத்திருக்கு

(கலர்)

---

13 வது வாரம

ராஜா
(யாழ்நகர்)
10-30. 2-30 6-00

செல்லமஹால்
(கொழும்பு)
2-30. 6-00. 9-30

ஈரோஸ்
(பாமன்கடை)
2-30. 6-00. 9-30

ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த

## ராஜாதி ராஜா

(கலர்)

---

14 வது வாரம

ஜெஸிமா
(கிராண்ட்பாஸ்)
2-30. 6-00. 9-30

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30 2 30. 6-30


தூசித
(ரோகனை)
10-15. 1-15. 3-30

கார்த்திக் - குஷ்பு
விஜய ராமசாமி
நடித்த

## வருஷம் 16

(கலர்)

---



# கிழக்கு மாகாண நடுக் கடலில்
## தமிழ் தேசிய இராணுவத்திற்கும் விமானப்படைக்கும் இடையில் மோதல்!

### 3 உறுப்பினர் பலி; ஆறுபேருக்கு காயம்

கொழும்பு மார்ச் 11

கிழக்கு மாகாண நடுக் கடலில் தமிழ்த் தேசிய இராணுவத்தினர்களுக்கும இலங்கை விமானப் படை வீரர்களுக்கும இடையில் கடும மோதல் நடந்தது-

இம் மோதலில் தமிழ்த் தேசிய இராணுவத்தில் உள்ள உறுப்பினர்கள் மூவர் கொல்லப் பட்டனர்- மேலும ஆறு பேர் காயமுற்றனர்-

இச்சமபவம கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது- இச் சமபவம் நடந்த நான்கு மணித்தியாலயங்களின் பின்னர் கடற் படை வீரர்கள் வேறு ஒரு வள்ளத்தை வழிமறித்துள்ளனர்-

இந்த வள்ளத்தில் இருந்த பலம வாய்ந்த வெடி பொருட்களும இயந்திரத் துப்பாக்கிகளும இராணுவ சீருடைகளும உணவு வகைகளும மருந்து வகைகளும கைப்பற்றப்பட்டன-

அத்தோடு இந்த வள்ளத்தில் இருந்த பத்து நபர்களையும விசாரணை செய்த போது அவர்கள் தமிழ் தேசிய இராணுவ உறுப்பினர்கள் என அறியப்பட்டது- (இ-155)

## 300 மௌலவி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

களுக்கு ஒரு கல்வி, ஏழைப் பிள்ளைகளுக்கு இன்னொரு கல்வி என்ற நிலை இருக்காது. எல்லா மாணவர்களுக்கும எதுவித பாகுபாடுமின்றிச் சம கல்வி அளிக்கப் படும.

கல்வி மனதுக்கு சக்தியை ஊட்ட வேண்டும.

கல்வி சமயத்தின் அடிப்படையாக அமையவேண்டும. அதுவே மேன்மைக்கு வழி.

இப்படி அமைச்சர் கூறினார், சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது பேசுகையில்,

இலங்கையில் சரியான திட்டமிட்ட கல்விக் கொள்கை இல்லை ஆட்சி மாற்றங்களுடனும, அமைச்சர்களின் மாற்றங்களுடனும் கல்விக்கொள்கை மாற்றி விடுகிறது.

இதகுறித்து தீவிரமாக கல்வி அமைச்சர் ஆராய வேண்டும, என்றார்.

முஸ்லிம சமய, கலாசார விவகார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஜாபீர் ஏ காதர், அரச உதவி கொறடா அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் எம பி ஜனாப் ஹலீம இஷாக், எம். பி ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவர் ஜனாப் எமஎச்எம அஷ்ரப். முஸ்லிம கல்வி மாநாட்டின் நிர்வாக சபைத் தலைவர் ஜனாப் எஸ் எல் எம ஷாபி மரிக்கார், செயலாளர் ஜனாப் ரீ எம அப்பாஸ் ஆகியோரும உரைநிகழ்த்தினர்.

(உ-007)

---

51 வருட சேவைக்கு ஊக்கம அளித்துள என்றார். பாராட்டுக்கு நன்றியும தெரிவித்தார்,

அவர் மேலும் கூறியதாவது—

பெருந்தோட்டத் துறையின் பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபடுபவர்களில் பாதிப் பேர் பெண்களாவர். இந்த தோட்டத் தொழிலாளர்களின் நிலை உயர; வாழ்க்கைத் தரம உயர நாம நீண்டகாலமாக பல தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளோம.

மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உலகததின் பல நாடுகள் எமக்கு உதவி வருகின்றன.

குறிப்பாக - ரஷ்யா, ஆண்டுதோறும மலையக பெண்கள் இருவருக்கு உயர்கல்வி புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது,

இதன்பயனாக மலையகத்தில் டாக்டர்கள், பொறியியலாளர்கள் போன்றோரை உருவாக்க வழிபிறந்தது.

மலையக மக்களின் குடியுரிமை பிரச்சினை சட்ட ரீதியாகத் தீர்க்கப்பட்டாலும கூட நடைமுறையில் அது தீர்க்கப்பட்டதாக தெரியவில்லை.

மலையகத்தின், மலையக மக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும, பெண்களின் உரிமைகளைப் பெற முயலவேண்டும.

இந்நாட்டு பொருளாதாரத்தின் ஆணி வேரே மலையகப் பெணகள் தாம். அவர்களின் வாழ்க்கைத தரம உயரவேண்டும,

அரசு திட்டங்களை வகுக்கும போது மாதர் சஙகங்களின் ஆலோசனைகளையும பெற வேண்டும. அதன் மூலம மாதர் புறக்கணிக்கப்படுவதை ஓரளவில் தவிர்க்கலாம.

பிரச்சினைகள் வரும போது பெண்கள் ஒன்றுபட்டு போராடி தமது உரிமைகளைப் பெற முயலவேண்டும.

இப்படி திருமதி டோனியா சாண்ட் கூறினார்,

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளர் ஜனாப் அஷ்ரப் அஸீஸ், செல்வி சாந்தா குரூஸ் உட்பட மற்றும பலரும இங்கு உரை நிகழ்த்தினர்.

மலையக மாதர்களின் நடன நிகழ்ச்சிகளும் விழாவில் இடம பெற்றன.

(உ-வ)

## எயிட்ஸ்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

றிற்காக ஏதாவது ஒரு ஆஸ்பத்திரியில் சேர்ந்தாக வேண்டும இவரை ஏனைய கர்ப்பிணிகளுடன் வைத்து சிகிச்சை அளிக்க முடியாது என்று மகப்பேற்று அஸ்பத்திரிகள் தெரிவித்திருக்கின்றன-

இலங்கை வைத்திய வரலாற்றில் கர்ப்பிணி ஒருவர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும.

(உ-மு)

## மரண அறிவித்தல்

"லத்தீசியா தமேல் ஆசிரியை"

தூரவணே, கொச்சிக்கடையைச் சேர்ந்த டபிள்யூ லத்தீசியா தமேல் ஆசிரியை காலமானார், இவர் கொழும்பு கொட்டாஞ்சேனை நல்லாயன் ஆங்கில கன்னியர் மடத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியையாவர். இறுதிச் சடங்கு 12ஆம திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பள்ளஞ்சேனை சேமக் காலையில் நடைபெறும்.

பவுலினஸ் பீரிஸ்

---

றவரால் 29 அக்டோபர் 1983 திகதியிடப்பட்ட இறுதி உயில் நிருபணம் செய்யும விதத்தில் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி இலக்கம கொண்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டிருக்கிறது என்றும இத்தால் அறிவிக்கப்படுகிறது-

சமபந்தப்பட்ட எவரும 1990 மார்ச் 16 ம திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முறையான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கான காரணங்களை காட்டுமாறு இத்தால் கோரப்படுகின்றனர்-

நீதிமன்றக் கட்டளைப்படி
கே மகேந்திரராஜா
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம
திருகோணமலை-

திகதி- 12 பெப்ரவரி 1990

---

## தினபதி சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

பேராதனைக்கு அண்மையில் மின்சாரம, நீர், போக்குவரத்து வசதிகளுடனான முஸ்லிமகள் அதிகமாக வாழும பாதுகாப்பான பகுதியில் வீடு கட்டுவதற்கு காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு- பர்ச் விலை 1000/- முதல் 4000/- வரை சலுகைகள் உண்டு- விபரங்களுக்கு, சட்டத்தரணி தூசானி, 6, கொழும்பு வீதி, கண்டி- போன் 23132-

வி இ 031685


சந்திரபாபு, நாகேஷ் பாணியில்

# மனதை நகைச்சுவையுடன் உருக வைக்கக்கூடிய நடிகர்

## "நோ பிராப்ளம்" விவேக்!



நாகேஷ்



சந்திரபாபு



விவேக்

காட்சிக்கு காட்சி நகைச்சுவை நடிப்பா? நகைச்சுவையுடன உணர்ச்சிமயமான உருக வைக்கும நடிப்பையும கலந்து காட்டுவதா? இவ்வரு நடிப்பிலும கரை கண்டவர்களான சந்திரபாபு, நாகேஷ் வரிசையில இந்தா ஒரு இளைஞர் தமிழ் திரைவானில் ஒளிவிடத் தொடங்கியிருக்கிறார்—

தகுதி உள்ள புதியவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் உயர வழி வகுப்பதில் கைராசிக்காரரான கே பாலசந்தரின் புதிய கண்டுபிடிப்பு— பெயர் விவேக்!

கே பாலசந்தரின் "மனதிலே உறுதி வேண்டும" படத்தில் சுஹாசினியின் தமபியாக அறிமுகப்படுத்தப்பட்ட இளைஞர் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றுள்ள "புதுப்புது அர்த்தங்கள்" படத்தில் கதாநாயகனான ரகுமானின் செயலாளராக நடித்து அடிக்கடி "நோ பிராப்ளம... நோ பிராப்ளம..." என்ற வார்த்தையை தமாஷாக உதிர்த்து இன்று "நோ பிராப்ளம" விவேக் என்று பெயர் பெற்று வளர்ந்து வருகிறவர் விவேக்!

சித்ராவின் "தேளடி கண்மணி" இவர் நடிக்கும புதுப் படஙகளில் ஒன்று—

நெல்லை மாவட்டம பாளையங்கோட்டையைச் சேர்ந்த இந்த இளைஞர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் "எம காம" பட்டம பெற்று "பி எல்" வக்கீல் பட்டமும பெற்றவர்!

படிப்பில் உயர் பட்டஙகள் பெற்றதுடன் கலைத்துறையில் முன்னேற இவர் பெற்றுள்ள பயிற்சிகள் பல!

நல்லொழுக்கத்தை உயிராகக் கருதும "நோ பிராப்ளம" விவேக் ஒரு தெய்வ பக்தன் என

மோனியம வாசித்து இறைவனை வேண்டினேன்—

இறைவன் டைரக்டர் சார் மூலம எனக்கு வழிகாட்டி இருக்கிறார்!

டைரக்டர் சார் முன்பு மோனோ ஆக்டிங செய்து காட்டினேன்— எனக்கு ஒருநாள் திடீர் என்ற அழைப்பு விடுத்தார்! அழைப்பு வரும அந்த நேரத்தில் "அவர்கள்" படத்தை டி வியில் பார்த்துக் கொண்டிருந்தேன்—

நடிக்க சான்ஸ் எப்போது வரும என்று மதுரைக்குச் சென்று விநாயகர் ஆலயம ஒன்றில் வேண்டிக் கொண்டிருந்ததுடன் கோவிலில் உட்கார்ந்து ஆர்

இன்று படஙகளுடன் பாலச்சந்தர் சார், கோமல் சுவாமிநாதன் சார் இயக்கும டி வி தொடர் படஙகளிலும நடித்து வருகிறேன்!

கலைத் தொழில் பொழுது போக்குக்காக ஏற்றுக் கொண்ட தொழில் அல்ல! அது என் உயிருடன் கலந்தது!

இவ்வாறு கூறினார் "நோ பிராப்ளம" விவேக் [இ—10]



# தனியார் துறையில் 10 லட்சம் தொழில் வாய்ப்புகள்

— பிரதமர் தகவல்

கொழும்பு, மார்ச் 11

தனியார் துறையில் பத்து லட்சம வேலைவாய்ப்புக்களை உருவாக்க அரசாஙகம புதிய திட்டம ஒன்றை வகுத்துள்ளது தனியார் நிறுவனஙகளுக்கு வசதிகளையும், சலுகைகளையும வழஙகுவதன் மூலம புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கச் செய்வதே அரசாஙகத்தின் திட்டமாகும—

பிரதமர் டி பி விஜேதுஙக நாடாளுமன்றத்தில் நடத்திய பத்திரிகையாளர் கூட்டத்தில் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும அரசாஙகத்தின் இத் திட்டம பற்றிய தகவல்களை வெளியிட்டார்—

இத் திட்டம மூன்று அடிப்படைகளில் செயல்படுத்தப் படும— கொள்வனவு நிலையஙகளை அமைக்கும பொருட்டு சலுகைகள் வழஙகல் நாட்டைத் தொழில்மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் சலுகைகள் வழஙகுதல் வருமானம குறைந்த குடுமபஙகளுக்கு தொழில் பெற்றுத் தரும் வகையில் சலுகைகளை வழஙகுதல் என்ற அடிப்படையில் இத்திட்டம நடைமுறைப் படுத்தப்படும—

இதன் மூலம புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க தனியார்துறையினர் ஊக்குவிக்கப் படுவர்— ஆடை உற்பத்தி, வைரக்கல் பட்டை தீட்டுதல் ஆகிய துறைகளுடன் புதிய வேலைவாய்ப்புக்கள் உடனடியாக உருவாக்கப்படலாம என்று எதிர்பார்க்கப்படுகிறது—

இவ்வாறு பிரதமர் கூறினார் தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிஙக இத் திட்டம பற்றி கூறியதாவது;—

ஒவ்வொரு உதவி அதிபர் பிரிவிலும கொள்வனவு நிலையஙகள் அமைக்கப்படும— ஒவ்வொரு கொள்வனவு நிலையத்துக்கும பத்து லட்சம ரூபா நிதியுதவியாக வழஙகப்படும—

இந் நிலையஙகளின் பேரில் வழஙகப்படும வஙகிக் கடன்களுக்கு 12 சதவீத வட்டி அறவிடப்படும— கடனைத் திருப்பிச் செலுத்த மூன்று ஆண்டு கால அவகாசம வழஙகப்படும— இந் நிலையஙகளின் மூலம பெறப்பட்ட லாபத்திற்கு ஐந்து ஆண்டு காலத்துக்கு வரி செலுத்தத் தேவையில்லை—

இதேசமயம முதலீடுகளின் பேரில் அரசாஙகம இப்போது வழஙகிவரும சலுகைகள் தொடர்ந்து நீடிப்பு செய்யப்பட்டுள்ளன எதிர்வரும செப்டமபர் மாதம முப்பதாம திகதி வரை முதலீடு செய்பவர்கள் இச் சலுகைகளுக்கு உரித்துடையவர்களாவர்—

இவ்வாறு தொழில் அமைச்சர் விளக்கமளித்தார்- (இ-032)



## நிந்தவூரில் சமய தின விழா

அக்கரைப்பற்று கோட்டக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி, கலாசார, சமய தினவிழா, நிந்தவூர் அல் அஷ்றக் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது—

அக்கரைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி ஜனாப் ரீ இபுறா லெவ்வை இவ்விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றுவதையும, விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படஙகளில் காண்க.

[படஙகள்— ஏ எல் எம சலீம] (இ-217)

குறைந்த எடையில் பாண் தயாரிப்பு

# வர்த்தகர்களிடம் ரூ. $3\frac{1}{2}$ லட்சம் அபராதம்

கொழும்பு, மார்ச் 11

உள்ளூர் விற்பனை தொடர்பான ஆணையாளர் திணைக்களம கடந்த ஜனவரி மாதத்

ஆம திகதி முதல் 22ஆம திகதி வரையிலான காலப் பகுதியில் குறைந்த எடையில் பாணை தயாரிக்கும பேக்கரிகளின் மீது திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன

போது 123 பேக்கரி உரிமையாளர்கள் பிடிபட்டனர்—

குறைந்த எடையில் பாணை தயாரித்த காரணத்தினால் இவர்களுக்கெதிராக வழக்கு தொடரப்பட்டது—

இதனை உள்ளூர் விற்பனை தொடர்பான ஆணையாளர் திருமதி ஜே சீ பின்னவெல தெரிவித்தார்.

இதேவேளை பெப்ரவரி மாதம முதல் வாரத்திலும இவ்வாறான பல முற்றுகைகள் நடத்தப்பட்டுள்ளன—

இதன்மூலமும பெருந்தொகையான பணம அபராதமாக பெற

## முதலமைச்சர் வெளிநாடு பயணம்

நாத்தாண்டி, மார்ச் 10

வடமேல் மாகாண முதலமைச்சர் திரு காமினி ஜயவிக்ரம பெரேரா வெளிநாடு சென்றுள்ளார்.

அதனால் வடமேல் மாகாண சபை கடற்றொழில், மின்சக்தி, எரிபொருள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி லெரீன் பெரேரா முதலமைச்சராகக்

முன்னேற இவர் பெற்றுள்ள பயிற்சிகள் பல!

நல்லொழுக்கத்தை உயிராகக் கருதும "நோ பிராப்ளம" விவேக் ஒரு தெய்வ பக்தன் எனலாம- கலையோடு பக்தி மணம கமழும கருத்துகளையும பேச்சில் அள்ளித் தெளிக்கும விவேக் நிருபரிடம கூறியதாவது—

"என் முதல் சொல்லே பாலச்சந்தர் சாருக்கு நன்றி! நன்றி என்பதுதான்!

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும போதே நான் சமூக சேவை சங்கத்தில் சேர்ந்து பணி புரியத் தொடங்கினேன்-

காமெடி நாடகங்கள் பல எழுதி மாணவர்களுடன் சேர்ந்து நடித்ததுடன் விடுமுறை நாடகளில் மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு சென்று நாடகம நடத்துவோம-

நாடகம என்றால் வண்ண வண்ண திரைச்சீலையா (சீன்), ஒலிபெருக்கியா, மின்சார விளக்கா இருக்காது!

கிராமத்து மக்களிடையே உள்ள குடி, குடிதண்ணீர், குடுமபத் தகராறு, வரதட்சணை போன்ற பிரச்சனைகளைக் கேட்டுத் தெரிந்து அதையே நாடகமாக எழுதி கிராமத்து இளைஞர்களையும நடிகக வைத்து தெருக்களில் நாடகம நடத்துவோம!

மதுரை பாரதி மாடசாமி அவர்களிடம இசைப் பயிற்சி பெற்றேன்- ஆர்மோனியம வாசிப்பதில் நல்ல பயிற்சி உண்டு-

"மோனோ ஆக்டிங" (பல தரப்பட்ட மனிதர்களின் நடை, பாவனை, பேச்சுகளை ஒருவராகவே செயது காட்டுவது) தெருக் கூத்து போன்றவைகளிலும பயிற்சி பெற்றிருக்கிறேன், மோனோ ஆக்டிங" போட்டிக்காக சென்னை வந்த போதுதான் நாகேந்திரா கோவிந்தராஜன் அவர்கள் மூலம டைரக்டரிடம (கே பாலச்சந்தர்) அறிமுகம செய்யப்பட்டேன்-



சுவையும நிறமும மாறாத பூத்துக் குலுங்கும கனியை அருகில் வைத்துக் கொண்டு மணம மாறி வாடி விடக் கூடிய மலரை சுவைக்கிறாரே, இந்த மங்கையின் வாசத்தை இவர் இன்னும அறியவில்லையோ? (சத்யராஜ் — ஷோபனா)
[படம- மல்லுவேட்டி மைனர்] [இ—10]

## பொண்ணெ பெத்தவ என்று பெயர் மாற்றம்

"மாமன் வீட்டு மயிலே" என்ற பெயரில் தயாராகி வந்த படம, இப்போது "பொண்ணெ பெத்தவ" என்று பெயர் மாறியுள்ளது,

பாண்டியன் - பல்லவி, கோவை சரளா, விஜயலலிதா, அபிலாஷா, கவுண்டமணி, செந்தில் ஆகியோருடன் இரட்டை வேடமேற்ற நடிக்கிறார் எஸ் எஸ் சந்திரன்,

இரட்டை வேடங்களில் ஒன்று பத்திரிகை நிருபர் வேடம, சரத் சந்தர் கதை வசனம எழுத, சஙகர் கணேஷ் இசை அமைக்க, என் கே விஸ்வநாதன் ஒளிப் பதிவு செய்கிறார்.

ராமநாராயணன் திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்யும "பொண்ணெப் பெத்தவ" படத்தின் பெருமபாலான காட்சிகள் திருச்சியை சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ளன.

சென்னை திருவான்மியூரை அடுத்துள்ள ஆடமபர பஙகளா ஒன்றிலும படப்பிடிப்பு நடந்தது, (ல—10)

## "நம்நாட்டு ராஜாக்கள்

கோல்டன் குருப் நிறுவனம பிரம்மாண்டமான முறையில் தயாரித்துள்ள படம "நம நாட்டு ராஜாக்கள்"-

வி ரகுமான குஷ்பு பானு சந்தர் சுதாகர் நரேஷ் ஜெயசித்ரா துளசி டிஷ்கோ சாந்தி நடித்துள்ளனர்-

பரத்வஜா கதை திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்ய பிஎஸ் முருகேசன் மேற்பார்வையில் உமா நாசர் தயாரித்துள்ள படம "நம நாட்டு ராஜாக்கள்"!, (ம—10)

**தினபதி சினிமா**

கொழும்பு, மார்ச் 11

உள்ளூர் விற்பனை தொடர்பான ஆணையாளர் திணைக்களம கடந்த ஜனவரி மாதத்தில் நாடு முழுவதிலும 490 திடீர் முற்றுகைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது-

இந்த முற்றுகையின் போது குற்றவாளிகளாகக் காணப்பட்ட வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டு 3 லட்சத்து 56 ஆயிரம ரூபா அபராதமாகப் பெறப்பட்டது-

கடந்த ஜனவரி மாதம 15 ஆம திகதி முதல் 22ஆம திகதி வரையிலான காலப் பகுதியில் குறைந்த எடையில் பாணை தயாரிக்கும பேக்கரிகளின் மீது திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட இந்த சோதனைகளின் ... மாதம முதல் வாரத்திலும இவ்வாறான பல முற்றுகைகள் நடத்தப்பட்டுள்ளன-

இதன்மூலமும பெருந்தொகையான பணம அபராதமாக பெறலாம என பின்னவெல நமபிக்கை தெரிவித்தார். (இ-வ)

... அதனால் வடமேல் மாகாண சபை கடற்றொழில், மின்சக்தி, எரிபொருள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி லொீன் பெரேரா முதலமைச்சராகக் கடமையாற்றி வருகிறார். (ஐ-225)

## மேதினத்தை தேசிய தினமாக கொண்டாட எதிர்ப்பு

கொழும்பு மார்ச் 11

மே தினத்தை தேசிய தினமாக கொண்டாட வேண்டும- அரசாஙகம இவ்வாறு ஆலோசனை தெரிவித்துள்ளது- இதற்கு இலஙகை வர்த்தகக் கைத் தொழில் பொது தொழிலாளர் சஙகம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது-

இந்த சஙகம இது சமபந்தமாக தொழில் சமூக சேமநலன் அமைச்சுக்குக் கடிதம ஒன்றை அனுப்பியுள்ளது- அக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது-

மே தினம உழைக்கும பாட்டாளி மக்களின் தினமாகும- அதனை அரசியல் சார்புள்ள தினமாக கொள்வது சரியில்லை-

இப்படி அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது-

(இ—455)


இப்பொழுது பெறலாம்!

குணசேனா

ஆங்கில-தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.




எம். டி. குணசேன

அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலே— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

— 1990 மார்ச் 12 —
சுடர் 18 கதிர் 4431

# உலகில் 5 பேரில் ஒருவர் கல்வி அறிவு அற்றவர்

## அந்த நிலையை மாற்ற ஐ. நா. சபை நடவடிக்கை

உலக கல்வி அபிவிருத்தி, புள்ளி விவரங்களின் படி உலகில் வாழும் மக்களில் ஐவருக்கு ஒருவரே கல்வி அறிவு உள்ளவர்கள் என்று தெரியவந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும நாடுகளில் 98 சத வீதமானோர் கல்வி அறிவு இல்லாதவர்கள். இதிலும 74 சத வீதமானோர் ஆசியாவில் வசிக்கின்றனர் என்று அப்புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

வருடாவருடம 10 கோடி இளைஞர்கள் உயர் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு பாடசாலைகளை விட்டு வெளியேறுகின்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போதிய படிப்பு அறிவில்லாமல் பாடசாலைகளை விட்டு வெளியேறுகின்றார்கள். இவர்களின் வருங்காலம எப்படி இருக்கப் போகிறதென்று அவர்களுக்கே தெரியாது.

"உலகில் கல்வியறிவு குறுகி விட்டது" என்று ஐக்கிய நாட்டு அபிவிருத்தி திட்டத்தின் செயலதிபர் வில்லியம டிரேபர், இப்படி கூறியுள்ளார்.

எனவே பத்து வருடங்களில் "எல்லோருக்கும கல்வி" என்ற திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த ஐக்கிய நாடுகள் சபை முயன்று வருகிறது.

கல்வியைப் பரப்புவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும. படிப்பறிவில்லாத வயது வந்தவர்களும, இளைஞர்களும, பிள்ளைகளும கட்டாயமாக ஆரமபக் கல்வியைப் பெற வேண்டும.

அநேகமான ஏழைப் பிள்ளைகள் ஆரமப பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள்— இவர்களின் ஆரமப கல்விக்கு முழு அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும.

பன்முகப்படுத்தப்பட்ட கல்வி அறிவை இளைஞர்களுக்கும. யுவதிகளுக்கும மத்தியில் அறிமுகம செய்ய வேண்டும. சுயமாக வாழவும கற்றுக் கொடுக்க முயல வேண்டும—

சமுதாயத்திற்கு பிரயோசனமான மக்களை வளர்த்து எடுப்பதே "எல்லோருக்கும கல்வி" என்ற திட்டத்தின் அடிப்படை நோக்கம ஆகும. மக்கள் சுயமரியாதையாக வாழவும, சமுதாயத்தின் தரத்தை சீரமைக்கவும கல்வியறிவை போதிக்க வேண்டும.

"எல்லோருக்கும கல்வி" என்பது ஐக்கிய நாட்டின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கென சட்டபூர்வமான செயல் திட்டங்கள் செயல் படுத்தப்படும.

1979ஆம ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை "எல்லோருக்கும நல்வாழ்வு" என்ற திட்டத்தை ஆரமபித்தது. உலக நாடுகளின் மதிப்பைப் பெற்றது.

இப்பொழுது, "எல்லோருக்கும கல்வி" என்ற திட்டத்தை ஆரமபித்துள்ளது. (ம—455)

## இணக்க சபைகள்

இணக்க சபைகள் சட்ட மூலவு மீதான விவாதம கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது எம பிக்கள் பலரும இணக்க சபைகள் அமைக்கப்படுவதை வரவேற்றார்கள்.

இணக்க சபைகள் ஆகக் கூடுதலான பலன் அளிப்பதற்கு அவை எப்படி அமைக்கப்பட வேண்டும, எவ்வாறு இயங்க வேண்டும என்றெல்லாம நல்ல ஆலோசனைகள் பலவற்றையும அவர்கள் தெரிவித்தார்கள்.

இணக்க சபைகள் இந்தியாவில் உள்ள பஞ்சாயத்துக்கள் போன்றவை.

கிராமங்களில் எழும பிரச்சினைகளைக் கிராமப் பஞ்சாயத்துக்கள் கூடித் தீர்த்து வைக்கின்றன.

அந்தப் பணியைச் செய்வதற்குத்தான் இங்கே இணக்க சபைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்டத்தின் உதவியை நாடத் தேவையில்லை.

தகுந்த விளக்கங்கள். ஆலோசனைகள் கூறப்படுமானால் பிரச்சினைப்பட்டவர்கள் இணக்கம கண்டு சமாதானமாகச் சிரித்த முகத்துடன் போவார்கள்.

நீதிமன்றம செல்வதென்றால் வழக்கு மாதக்கணக்கிலும வருடக்கணக்கிலும கூட இழுபடும.

தவணைக்குத் தவணை

பாரம்பரிய

## அரசியல் கட்சிகளிடம் மக்கள் நம்பிக்கை இழப்பது அபாயகரமானது

### இளைஞர் அமைதியின்மை பற்றிய அறிக்கை கூறுகிறது

கொழும்பு மார்ச் 11

பாரமபரிய அரசியல் கட்சிகளிடம மக்கள் நமபிக்கை இழப்பது அபாயகரமான ஒரு விடயம— ஆகவே அரசியல் கட்சிகளின் குறைகள் களையப்பட்டு இக் கட்சிகளின் ஊடாக அரசியல் நீரோட்டத்தில் இளைஞர்கள் கலந்து கொள்ள வகை செய்யப்பட வேண்டும—

இளைஞர் அமைதியின்மை தொடர்பாக ஜனாதிபதியிடம சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அரசியல் கட்சிகளுக்கு இப்படி யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது—

திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை ஒப்படைத்தல், 1982 ஆம ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு, எதிர்க்கட்சியினர் அமைந்தன என்றும மேற்படி விசாரணைக் குழுவிடம சாட்சியமளித்தவர்கள் சுட்டிக் காட்டினராம—

இவை ஆளும கட்சிக்கு தற்காலிக அனுகூலங்களை அளிப்பதாக இருந்தாலும அரசமைப்பில் திருத்தம செய்வது மூலம இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும என்று இவ் விசாரணைக்குழு அரசாங்கத்திடம சிபார்சு செய்துள்ளது—

நாடாளுமன்றத்துக்கு ஒரு கிராமப்புற அரசியல்வாதி தெரிவு செய்யப்பட்டதும அவரது முன்னைய அடையாளம மங்கிப் போய் விடுகிறது என்று பொதுவாகக் கருதப்படுகிறது— முக்கியமான பிரச்சினைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதி மக்களுடன் கலந்தாலோசிப்பதில்லை என்றும குறை கூறப்படுகிறது— இதைத் தவிர்க்

இக் கமிட்டிக் கூட்டங்களில் இளைஞர்கள் தமது கருத்தைக் கூற அனுமதிக்கப்பட வேண்டும—

நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப்படும போது இக் கமிட்டிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும—

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது விவாத உரைகளைத் தயாரித்துக் கொள்ளும முகமாக தலா இரு பட்டதாரிகளைத் தமக்கு உதவியாக வைத்துக் கொள்ள வேண்டும— இதனால் பெருமளவு பட்டதாரிகளுக்கு தொழில் கிடைக்க முடியும—

பாரமபரிய அரசியல் கட்சிகள் தகைமையை விட குடுமபத் தகுதிக்கே முன்னுரிமை அளித்து வருகின்றன— இக் கட்சிகளுக்குள்ளே ஜனநாயக நெறிமுறை பேணப்படுவது குறைவு என்று இளைஞர்கள் கருதுகின்றனர்—

மேல் மா சபையின் நடமாடும செயலகம

## அமைச்சரின் தாமதத்துக்கு முதலமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு மார்ச் 11

பேலியகொடையில் நடந்த மேல் மாகாண சபையின் இரண்டாவது நடமாடும அமைச்சு செயலகத்திற்கு பிந்தி வந்த மாகாண சபை அமைச்சர் முதலமைச்சரால் எச்சரிக்கப்பட்டார்.

பிரஸ்தாப நடமாடும செயலகம பேலியகொட மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை ஆரமபமானது—

பிரஸ்தாப நடமாடும செயலகத்துக்கு மேல் மாகாண விவசாய, நீர்ப்பாசன அமைச்சர் திரு அல்மன் பீரிஸ் உரிய நேரத்தில் சமுகமளிக்கவில்லை.

இது குறித்து மேல் மாகாண முதலமைச்சர் திரு சுசில் முனசிங்க திரு அல்மன் பீரிஸை எச்சரித்தார்.

"நாம மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வை பெற்றுக் கொடுக்கும நோக்கத்துடனேயே இந்த நடமாடும செயலகத்தை நடத்துகிறோம. மக்கள் பெரிய எதிர்பார்ப்புடனேயே இதில்

...மளிக்காததமையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அமைச்சர் என்ற வகையில் மக்களை புறக்கணிப்பதை நான் அனுமதிக்கவே மாட்டேன்",

இப்படி திரு சுசில் முனசிங்க பத்திரிகையாளர்களிடம தெரிவித்தார்,

சுமார் இரண்டு மணிநேர தாமதத்துக்குப் பின்னர் அமைச்சர் அல்மன் பீரிஸ் அங்கு வந்து சேர்ந்தார்.

அமைச்சரின் வருகையில் ஏற்பட்ட தாமதம குறித்து பத்திரிகையாளர்கள் வினவினர்.

அதற்கு திரு அல்மன் பீரிஸ் பதில் அளிக்கையில் கூறியதாவது— பொது மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எனது வீடு தேடி வருகின்றனர், அவற்றையும நான் தீர்த்து வைக்க வேண்டியவனாக உளளேன்.

நான் வரும வழியில் பல இடங்களில் வாகன நெரிசல் இதனாலேயே எனது வரவில் தாமதம ஏற்பட்டது, எனினும 15 நிமிடங்களுள் எனது அமைச்சின்

## செய்தித் திரட்டு

### சொற்பொழிவு

"இன்றைய உலகில் மத்திய கிழக்கு" என்ற தலைப்பில் கலாநிதி நெவில் கனகரட்ன மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் இன்று 12 அம திகதி மாலை உரையாற்றுவார்—

நிலையத் தலைவரும, ஸ்தாபகருமான அல்ஹாஜ் எம எச் முகம்மது தலைமை வகிப்பார் (ஐ—007)

### மாணவர்களுக்கு செயல் அமர்வு

மடவளை மார்ச் 10

கண்டி தொலைக்கல்வி நிலைய 89—91 வருட கல்வியாண்டு மாணவர்களுக்கான செயல் அமர்வு எதிர்வரும 24, 25ஆம திகதிகளில் நடைபெறும—

மேற்படி செயலமர்வு பேராதனை ஆசிரியர் கல்லூரியில் நடைபெறும—

சம்பந்தப்பட்ட பயிற்சி ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதம அனுப்பி வைக்கப்பட்டுள்ளது— (ஐ—431)

### பிரதான வீதிகள் சீர்கேடு

மட்டக்களப்பு, மார்ச்— 11

மட்டக்களப்பு நகர எல்லைக்குள் அமைந்துள்ள பிரதான வீதிகள் குறுகியதாக இருப்பதால் தற்கால வாகனப் போக்குவரத்திற்கு உகந்ததல்ல— அவ் வீதிகள் அகலமாக்கப்பட வேண்டும—

இவ்வாறு மட்டக்களப்பு சைவ இளைஞர் மன்ற அமைப்பாளர் திரு எஸ் சூரியகாந்தன் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்— (ஐ)

### அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

கண்டி மார்ச் 10

உடதும்பறைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு மத்திய மாகாண சபை ஐந்து லட்சம ரூபாவை ஒதுக்கியுள்ளது—

300 குடுமபங்கள் வசிக்கும பம்பரபெத்த என்ற பகுதி 400 வருட வரலாற்றைக் கொண்ட பழைமை வாய்ந்த கிராமமாகும—

இப் பகுதியில் வசிக்கும மக்கள் நீரின்றியும, போக்குவரத்து காணி போன்ற வசதிகள் அற்ற

இழபடும.

தவணைக்குத் தவணை எத்தனையோ முறை நீதி மன்றம சென்று மணிக்கணக் காகத் காத்திருக்க வேண்டும.

பெருந்தொகை பணமும வழக்கிற்குச் செலவாகும.

இணக்க சபை என்றால் அது காலடியில் இருக்கும. குறுகிய காலத்தில் பிரச்சினை க்குத் தீர்வு கண்டு விடலாம. செலவும இல்லை, சிரமமும இல்லை.

ஆயினும ஒன்று.

இணக்க சபைகளில் மக்க ளின் நன்மதிப்பைப் பெற்றவர் கள் இருக்க வேண்டும. அறிவு, ஆற்றல், நேர்மை, ஒழுக்கம ஆகியவற்றில் சிறந்த வர்கள் இணக்க சபைகளில் இருந்தாற்றான் மக்கள் அவர் களை நாடிச் செல்வார்கள்.

இணக்க சபை விவகாரங்க ளில் அரசியல் சிறிதும தலை காட்டக் கூடாது.

சுமார் 16 வருடங்களுக்கு முன்னரும இணக்க சபைகள் இங்கே இருந்தன. அரசியல் தலையீடுகளாலும, மக்களின் நன்மதிப்பைப் பெறாதவர் கள் பலர் இணக்க சபைகளில் இருந்ததாலும அவற்றால் தமக்கு உரிய பணியைச் சரி வரச் செய்ய இயலாமல் போயிற்று.

அது ஒரு பாடமாக அமைய வேண்டும.

இணக்க சபைகள் சீராக இயங்குமானால் நீதிமன்றங் களுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை குறைந்து விடும. வழக்குத் தீர்ப்புகளும கால தாமதமின்றி வழங்கப்பட்டு விடும.

மாக் குடிதங்களை ஒப்படைத் தல், 1982 ஆம ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு, எதிர்க்கட்சியினர் மாத்திரம அரசாங்கக் கட்சிக்கு தாவும வகையில் அமைந்த நடை முறை ஆகியவற்றை நேர்மை யற்ற ஜனநாயக விரோத செயல் கள் என்றும இன்றைய குழப்ப நிலைக்கு இவையும காரணமாக

## புதிய திட்டம் அறிமுகம்

அக்குறணை மார்ச் 10

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு ஆறு மாத கால ஆங்கில மொழிப் பயிற்சியை மேற்கொள் வோரை அரசாங்க அலு வலகங்களில் வாரத்தில் நான்கு நாட்கள் காலை எட்டரை முதல் பகல் பன்னி ரெண்டு மணிவரையும இலி கிதர் சேவையில் ஈடுபடுத்தும புதிய திட்டம ஒன்று கண்டி மாவட்டத்தில் கடந்த ஏழாம திகதி முதல் அறிமுகம செய்து வைக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் இருந்து இலங்கையின் சகல பல் கலைக்கழகங்களுக்கும தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கே இவ்வாய்ப்பு கிட்டியுள்ளது-

இவ்வாறு இலிகிதர் (எழுது வினைஞர்) சேவையில் அரை நாட்கள் ,வாரத்தில் நான்கு நாள் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பல்கலைக்கழக ஆணைக்குழு வினால் பதினான்கு ரூபா வீதம நாளொன்றுக்கு வழங்கப்பட உள்ளன.

இந்த எழுதுவினைஞர் சேவை அரச அலுவலகங்களில் சேவைக ளுக்குப் பேருதவியாக அமைந் துள்ளதும குறிப்பிடத்தக்கது-

(ஐ-411)

தொகுதி மக்களுடன் கலந்தா லோசிப்பதில்லை என்றும குறை கூறப்படுகிறது- இதைத் தவிர்க் கும வகையில் விசேஷ ஆலோச னைக் குமிட்டிகள் நிறுவப்பட வேண்டியது அவசியம-

குள்ளே ஜனநாயக நெறிமுறை பேணப்படுவது குறைவு என்று இளைஞர்கள் கருதுகின்றனர்-

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது-

[ந—032]

இந்த நடமாடும் [illegible]கத்தை நடத்துகிறோம. மக்கள் பெரிய எதிர்பார்ப்புடனேயே இதில் கலந்து கொள்கின்றனர். மக்களின் நலன் கருதி அமைச்சர் அல்மன் பீரிஸ் உரிய நேரம இங்கு சமுக

# தமிழ் இராணுவத்தினரை தேடி மலையகத்தில் வேட்டை

கொழும்பு மார்ச் 11

தமிழ் தேசிய இராணுவத் தினரை தேடி மலையகத்தில் பெரும தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது-

இச்சோதனைகளின் போது மூன்று நபர்களை கடந்த வெள் ளிக்கிழமையன்று பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்-

தற்போது நாட்டின் பல பாக ங்களிலும தங்கி இருக்கும தமிழ் தேசிய இராணுவத்தினர் கலவரங் களை உண்டு பண்ணலாம என பொலீஸ் புலனாய்வு பகுதிக்கு தக வல்கள் கிடைத்துள்ளன-

ஹோட்டல்கள், விடுதிகளின் உரிமையாளர்கள் தங்குவ தற்கு இடமளிக்கும பொழுது அவர்கள் சட்ட விரோத நடவடிக் கைகளில் ஈடுபடவில்லை என் பதை உறுதி செய்ய வேண்டும- அத்துடன் துப்பாக்கி வெடி பொருள்கள் இல்லாதிருப்பதை யும் உறுதிப்படுத்த வேண் டும-

நுவரெலியாவில் ஈ என் டி எல் எப் ஆதரவாளரான நாரயன விஜயபாலன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்- இவருக் கும, நகைக்கடை ஒன்றின் கொள்ளைக்கும சம்பந்தமிருப்ப தாக கூறப்படுகின்றது- இவரு டன் இன்னும இருவரும மலை நாட்டில் ஊடுருவல் செய்ததாக பொலீஸாரால் கைது செய்யப் பட்டனர்-

ஈ என் டி எல் எப் உறுப்பினர் களின் தற்காலிகமான வீடொன் றில் பொலீஸார் தேடுதலை நடத்தினார்கள் அப்பொழுது ஈ பி ஆர் எல் எப் அடையாள அட் டைகளையும வெடி பொருள்க ளையும கைப்பற்றியதாக பொலீ ஸார் தெரிவித்தனர்-

வடபகுதி இளைஞர் ஒருவர் பசறையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்- அப்பொழுது அவரிடம சோவியத் நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏ கே 47 துப் பாக்கியும, அதிகப்படியான வெடிமருந்துகளும கைப்பற்றப் பட்டன-

இவர் வடக்கிலிருந்து பதுளை க்கு வரவேண்டிய காரணம என்ன என்பது பற்றி பொலீஸார் மேலும விசாரணை செய்து வருகின்றனர்-

(ம-455)

மலையகத்தில்

# விசர்நாய் தடுப்பூசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

கொழும்பு மார்ச் 11

மஸ்கெலியா, டிக்கோயா, பொகவந்தலாவை, ஆகிய பகுதிகளில் விசர்நாய், தடுப் பூசி, மருந்துகளுக்குப் பெரும தட்டுப்பாடு நிலவுகின்றது,

இத்தட்டுப்பாட்டினால் விசர் நாய்க்கடியினால் பாதிக்கப் படும, நோயாளிகள் கண்டி, நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக ளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதனால் மக்கள் பெரும கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது,

பிரன்விக் தோட்டத்தைச் சேர்ந்த ஆறு வயது பையன் விசர் நாய்க்கடியினால் இறந்துள் ளான் இன்னும பல இறப்புகளும இடம பெற்றுள்ளன.

மத்திய மாகாண சபை உறுப் பினரான திரு எ. இராமையா இந்நிலைமையை உடனடியாக சீர்படுத்த வேண்டுமென்று சுகாதார அமைச்சிடம கேட் டுள்ளார்,

குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமல்லாமல் மலைநாட்டு ஆஸ்பத்திரிகளிலும இம்மருந்து தாராளமாக வைப்பில் இருக்க வேண்டுமென்று அவர் மேலும கேட்டுள்ளார்.

(ஐ-455)

இதனாலேயே எனது வரவில் தாமதம ஏற்பட்டது, எனினும 15 நிமிடங்களுள் எனது அமைச்சின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க என்னால் முடியும" என்று கூறினார்.

மேல் மாகாண சபையின் கல்வி, வேலை வாய்ப்பு அமைச் சர் திரு சுரணமல ராஜபக்ஷ இங்கு உரை நிகழ்த்தும போது,

தனது அமைச்சுக்கு சமர்ப் பிக்கப்பட்ட பெரும்பாலான பிரச்சினைகள் பாடசாலைகள் தொடர்பானதும வேலை வாய்ப் புகள் தொடர்பானதுமாகும. இவற்றைத் தீர்த்து வைக்க தாம நடவடிக்கை எடுத்ததாக வும சொன்னார்,

மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் திரு ஒவி அபேகுணசேகர போக்குவரத்து வீடமைப்பு, பொருளாதார அமைச்சர் திரு லோரன்ஸ் மாதிவெல, கூட்டுறவு கைத் தொழில் அமைச்சர் ஜனாப் ஏ எச் யூசுப் ஆகியோரும இந்த நடமாடும செயலகத்தில் கலந்து கொண்டனர்.

(ந-வ)

## தேவராஜிடம் கோரிக்கை

பொகவந்தலாவை, மார்ச் 10

கொத்மலைப் பிரதேசத் திலுள்ள இந்து ஆலய சிலை களையும, ஆலய பொருட் களையும மீட்டெடுக்குமாறு நோர்வூட் ஞான ஜோதிப் பீடம இந்து சமய கலாசார இணை அமைச்சர் திரு பி பி தேவராஜிடம கோரிக்கை விடுத்துள்ளது-

நீரினால் மூடுண்ட தோட் டங்களிலுள்ள இந்து ஆலயங்க ளின் பொருட்களையும, சிலைக ளையும கையேற்று பாதுகாக்க வேண்டும.

அல்லது கைவிடப்பட்டுள்ள மேற்படி பொருட்களை சேக ரித்து பாதுகாக்க ஏற்ற நட வடிக்கை மேற்கொள்ள வேண் டும.

இவ்வாறு கோரிக்கை விடப் பட்டுள்ளது-

(ஐ-041)

கும-

இப் பகுதியில் வசிக்கும மக் கள் நீரின்றியும, போக்குவரத்து காணி போன்ற வசதிகள் அற்ற வர்களாகவும வாழ்ந்து வருகின் றனர்- இவர்களின் பல்வேறு குறைகளைப் போக்க தொண் லாந்து அரசாங்கமும முன்வந் துள்ளது-

(ஐ-017)

## மின்சாரத் தடை: மக்கள் பாதிப்பு

வெலிகாமம் மார்ச் 10

வெலிகாமம நகரில் அடிக் கடி மின்சாரம தடைப்பட்டு வருகிறது-

இதனால் நகரவாசிகள் பெரு மளவில் பாதிக்கப்பட்டு வருகின் றனர்-

குறிப்பாக கல்பொக்கை, பகியகொட, பழைய தெரு, கோட்டகொட போன்ற பகுதி களில் உள்ள மக்களே பெருமள வில் பாதிக்கப்பட்டு வருகின் றனர்-

(ஐ-331)

## சேவை முன்பயிற்சி கருத்தரங்குகள்

மடவளை மார்ச் 10

கண்டி மாவட்டத்திலிருந்து பயிற்சி ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சேவை முன் பயிற்சி கருத்தரங்குகள் நடை பெறுகின்றன-

மேற்படி சேவை முன் பயிற்சி கருத்தரங்குகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன-

மத்திய நிலையங்களாக [illegible] ளை. [illegible] கல்லூரி [illegible] ளிர் கல்லூரி நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயம் என் பன தெரிவு செய்யப்பட்டுள்ளன

(ஐ-431)

# காஷ்மீர் நெருக்கடி: தீர்வுக்கு தனி அமைச்சர்

## அனைத்துக் கட்சி கூடிய பின் ஏகோபித்த முறையில் இணக்கம்

புதுடில்லி, மார்ச் 11

**காஷ்மீர் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக தனி அமைச்சர் ஒருவரை நியமிப்பதென சனிக்கிழமை முடிவு செய்யப்பட்டது. அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் இந்த முடிவுக்கு ஏகோபித்த முறையில் இணக்கம் தெரிவித்தனர்.**

இந்திய தலைவர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் இப்போது தீவிரமாக இறங்கியிருக்கின்றனர்.

முஸ்லிம் பிரிவினைவாத கிளர்ச்சிகளால் இதுவரை சுமார் 200 பேர் உயிரிழந்திருக்கின்றனர். முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரே மாநிலமான காஷ்மீர் நெருக்கடியை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பது குறித்து நியமிக்கப்படவிருக்கும் புதிய அமைச்சர் ஆராய்வார்.

புதிய அமைச்சரின் பெயர் இன்னும் தெரிவுசெய்யப்படவில்லை. அனைத்துக் கட்சி ஆலோசனைக் குழுவின் ஒத்துழைப்புடன் புதிய அமைச்சர் காஷ்மீர் பிரச்சினை தீர்வு குறித்து ஆராய்வார்.

இவ்வாறு அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிக் குழுவினர் சனிக்கிழமை கூடிய பின்னர் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர். அந்த அறிக்கையில் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதி மக்கள் வன்முறைகளைக் கைவிட வேண்டும். சமாதான முறையில் நெருக்கடியைத் தீர்க்க எமக்கு உதவ வேண்டும். அவர்களது துயரங்களைத் தீர்க்க நாம் எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்க வகை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தார்.

காஷ்மீர் சென்று திரும்பிய பின்னர் பத்திரிகையாளரிடம் கருத்து வெளியிட்ட ராஜீவ் காந்தி தனது காங்கிரஸ் கட்சி, தேசிய ஐக்கியத்துக்காக அரசு எடுக்கும் சகல பணிகளிலும் ஒத்துழைப்பு நல்கும் என உறுதி அளித்தார்.

காஷ்மீர் கிளர்ச்சியாளர்களின் போராட்டங்களுக்குப் பின்னால் ஒரு சக்தி இயங்குகிறது. எல்லைக்கு அப்பால் இருந்து இந்தச் சக்தி இயங்கிய வண்ணமுள்ளது என அனைத்துக் கட்சிக் குழு தெரிவித்திருக்கிறது. (எ)

## மண்டேலாவின் சுற்றுலா இடையில் முறிந்தது

மொரோகோரோ டான்ஸானியா மார்ச் 11

கறுப்பர் தலைவர் நெல்சன் மண்டேலா தமது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை இடைநடுவில் சுருக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டார்.

27 வருடம் தென்னாபிரிக்க சிறையில் வாடிய 71 வயதான மண்டேலா தமது சுற்றுலா நிகழ்ச்சி நிரலை இடையில் முறித்துக் கொண்டார்.

மெலிந்தும் களைத்தும் தோன்றிய மண்டேலாவுக்கு உடனடியாக ஓய்வெடுக்குமபடி வைத்தியர்கள் ஆலோசனை கூறினர்.

இதனால் அவர் நாடு திரும்பும் வழியில் தென்னாபிரிக்க விடுதலைக் காங்கிரஸின் இராணுவ பயிற்சி முகாம்களை பார்வையிட்டார்.

வரும் வழியில் எதியோப்பியாவில் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கையும் சந்தித்து உரையாடினார்.

தென்னாபிரிக்காவில் கறுப்பர்களுக்கு எதிராகக் கறுப்பர்கள் வன்செயல்களில் ஈடுபட்டிருப்பது மண்டேலாவைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. [எ—ரி]

## ஹெயிட்டியில் தற்காலிக

## தெ. ஆபிரிக்காவில் கலகம் விளைவித்த பலர் பொலீசாரால் கைது

ஜொஹன்னஸ்பேர்க் மார்ச் 11

கடந்த வெள்ளியன்று தென் ஆபிரிக்கப் பொலீஸார் கலகங்களில் ஈடுபட்ட பெருந்தொகையானவர்களைக் கைது செய்தனர். இவர்களில் பெரும்பான்மையினர் கறுப்பர்கள் ஏனையோர் வெள்ளையர்கள். கடந்த நான்கு வருடங்களில் நடந்த கலகங்களில் மிகவும் மோசமான கலகம் இதுவென அறிவிக்கப்படுகிறது.

அடிப்படை உரிமையாளரின், குற்றவாளிகளின் அடாவடித்தனமே கலவர இது வேறொன்றும் அல்ல இப்படி நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் சூடாகப் பதிலளித்துள்ளார் சட்டத்துறை அமைச்சர் அட்ரியன் வ்லொக். இக் கலவரங்களில் 63 கறுப்பரும் 67 வெள்ளையரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெவெறிக்கு எதிரான ஆசிரியர்களின் ஊர்வலம் ஒன்றை எடுக்க வெள்ளையர் மேற்கொண்ட நடவடிக்கையின் பின்னரே கலகங்கள் மூண்டன.

இரு சாராரையும் விலக்கிச் செல்ல பொலீஸார் பணிக்க மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. [எ—ரி]

## உலகச் செய்திகள்



**ரஷ்யப் பிரதமர், சிங்கப்பூர் ஜனாதிபதி சந்திப்பு**

ரஷ்யப் பிரதமர் அண்மையில் சிங்கப்பூருக்கு விஜயம் செய்தார். சிங்கப்பூர் ஜனாதிபதி வீ கிம் வீயை அவர் சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

கூட்டுப் பொருளாதார ஆணைக் குழு ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தமொன்றில் சிங்கப்பூரும் ரஷ்யாவும் கைச்சாத்திட்டன. [எ—*ச]

## புத்தர் சிலை வாவியில் மூழ்கியது

புதுடில்லி, மார்ச் 11

தென் இந்திய ஹுசைன் சேகர் தீவில் நிலைநிறுத்த எடுத்துச் செல்லப்பட்ட புத்தரின் கருங்கற்சிலை ஒன்று நீரில் அமிழ்ந்தது. 350 தொன் நிறையுடைய இச்சிலை தீவை அண்மித்த போது திடீரென சரிந்து மூழ்கியது.

அமிழ்ந்த சிலையுடன் பத்துப் பேர் மூழ்கிவிட்டனர். பலர் தேடப்படுகிறார்கள். உடைந்த படகும் நீரில் மூழ்கியது.

35 லட்சம் டாலர் பெறுமதி உள்ள இச்சிலை எதிர்வரும் மே 9இல் திரைநீக்கம் செய்யப்பட இருந்தது. சுழியோடிகள் மீட்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். (எ—ரி)

## ரஷ்ய தலைவருக்கு அதிக அதிகாரங்களை தரும் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

# ஹெயிட்டியில் தற்காலிக காபந்து அரசாங்கம்

போர்ட் ஆப் பிரின்ஸ் மார்ச் 11

ஹெயிட்டி இராணுவ ஜெனரல் ஹெராட் ஏப்ரஹாம தலைமையிலான காபந்து அரசாங்கம ஒன்று சனிக்கிழமை ஹெயிட்டி ஆட்சியைப் பொறுப்பேற்றது- 72 மணி நேரம இவர் தலைமைப் பதவியில் இருந்த செயல்படுவார்-

ஹெயிட்டி ஜனாதிபதி புரொஸ்பர் ஹவ்ரிலின் ராஜினாமாவை அடுத்தே தற்காலிக காபந்த அரசு அமைக்கப்பட்டு இராணுவ ஜெனரலுக்குத் தலைமைப் பதவி வழங்கப்பட்டிருக்கிறது-

நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே ஏப்ரஹாம பதவியேற்றிருக்கிறார்- வானொலி மூலம அவர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்- அந்த அழைப்பின் போத நாட்டில் அமைதி பேணப்படுமென உறுதியளித்தார்-

72 மணி நேரத்தின் பின் பிராந்திய அரசொன்றிடம ஆட்சி கையளிக்கப்படும- அரசமைப்புக்கு மதிப்பளிக்கும விதத்தில் தெ நடைமுறைப்படுத்தப்படுமென அவர் கூறினார்-

ஹெயிட்டி ஜனாதிபதி ஹவ்ரில் (52 வயது) 1988ஆம ஆண்டு இரத்தமசிந்தாப் புரட்சி மூலம ஆட்சிக்கு வந்தார்- லெப்டினன்ட் ஜெனரலாகப் பதவி வகித்த இவர் வெளியேற வேண்டுமென எதிர்க்கட்சிக் கூட்டுக் குழுவொன்ற போராட்டத்தில் இறங்கியது-

இந்தப் போராட்டம ஹெயிட்டி நகரங்கள் பலவற்றுக்கும பரவியது- ஹவ்ரில் நாட்டை விட்டு வெளியேறாத போனால் திங்கட்கிழமை வேலை நிறுத்தங்களும நடத்தப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டது-

[எ]

## பலஸ்தீனர் இருவர் பலி

டமாஸ்கஸ், மார்ச் 11

இஸ்ரவேல் விமானங்கள் நடத்திய ஊடுருவல் ஒன்றில் பலஸ்தீனர் இருவர் கொல்லப்பட்டனர்.

(எ)

# நேபாளத்தில் கொடும்பாவி எரித்து ஜனநாயக போராட்டம்

காதமண்டு மார்ச் 11

ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்- இவர்கள் கொடும்பாவிகளை எரித்ததன் விளைவாகவே கைதாகினர்-

நேபாளத்தில் ஜனநாயகம நிலைநிறுத்தப்பட வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம நடத்தி வரும எம ஆர் டி இயக்கத்தினரே கைது செய்யப்பட்டுள்ளனர்-

மஞ்சள் நிறச் சீலையால் சுற்றப்பட்ட மரக் குற்றிகள் கொடும்பாவிகளாக எரிக்கப்பட்டன- தலைநகரான காத்மண்டுவிலும மற்றும் பல நகரங்களிலும கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன-

1960 ஆண்டு கட்சிகளின் ஆதிக்கங்கள் தடுக்கப்பட்டு அவற்றுக்கு மீண்டும சுதந்திரம கொடுப்பதா என்ற பொதுசன வாக்கெடுப்பு 1980 ஆம ஆண்டு நடந்தது- அதில தடுக்கப்பட்ட கட்சிகளுக்குக் குறைந்த பெரும்பான்மை கிடைத்துள்ளது- இது அரசாங்கத்தின தலையீட்டால் ஏற்பட்டதாக எதிர்க் கட்சிகள் தெரிவிக்கின்றன-

மீண்டும ஜனநாயகம நிலைநாட்டப்பட வேண்டும என எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன-

காத்மண்டுவில் வெள்ளியன்று நிலைமை மோசமாக இருந்தது- வீதிகளில் பொலீஸ் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன-

மாணவர் ஒன்றிய (இடதுசாரி) தலைவர் ஒருவரும கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது-

[எ]

# சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

மாஸ்கோ மார்ச் 11

ரஷ்யத் தலைவருக்கு அதிக அதிகாரங்களைத் தரக்கூடிய சட்டமொன்றை எதிர்த்து 4000க்கும அதிக ஜோர்ஜிய வாசிகள் கிளர்ந்தெழுந்துள்ளனர்-

ஜோர்ஜியாவில் உள்ள அரசாங்கக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களுக்கு முன்னால் மக்கள் திரண்டனர்-

இன்று 12ஆம திகதி ரஷ்ய காங்கிரஸ் கூடுகிறது- இவ்வேளையில் சட்டத்தை இலகுவாக ஈடேற்றிக் கொள்ளத் திட்டமிடப்பட்டு இருக்கிறது-

ரஷ்யாவில் இன எதிர்ப்புப் போராட்டங்கள் பெருகிய வண்ணமுள்ளன- ரஷ்ய குடியரசுகள் பலவற்றில் இன்று அமைதியின்மை தலைதூக்கியிருக்கிறது-

இவற்றிற்கு ஈடுகொடுக்க ரஷ்யத் தலைவருக்கு அதிக அதிகாரங்கள் தேவை- இதனாலேயே அவருக்கு அதிக அதிகாரம தரக் கூடிய விரிவான சட்டமொன்றைக் கொண்டுவர ரஷ்யத் தலைவர் முன்வந்திருக்கிறார்-

இந்தச் சட்டத்தின் மூலம நாட்டின் எந்தவொரு பகுதியிலும குழப்பங்களைக் கட்டுப்படுத்த ரஷ்ய தலைவரால் உத்தரவிட முடியும-

இந்தச் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம நடத்தியவர்களில் சுமார் 30 பேர் உண்ணாவிரதத்திலும ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது- இவர்களில் 18 பேர் பெண்களாவர்-

காங்கிரஸ் சட்டத்தை ஒழிக்கும வரை உண்ணாவிரதம அனுஷ்டிக்கப் போவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்-

[எ]

# போதைவஸ்து கடத்தலை தடுப்பதற்கு அமெ. முயற்சி

## பலூன் வடிவிலான ராடர் பொருத்த ஏற்பாடு

வாஷிங்டன் மார்ச் 11

போதைவஸ்துக் கடத்தல்களை முறியடிக்க அமெரிக்கா 200 கோடி டாலர் செலவிலான புதிய திட்டம ஒன்றை வெள்ளியன்று அறிவித்தது-

கலிபோர்னியாவில் இருந்து புளோரிடா கரையோரத்தை உள்ளடக்கிய கரிபியன் பிராந்தியத்தில் பலூன் வடிவிலான ராடர் ஒன்று பொருத்தப்படும- இந்த ராடரின் துணையுடன் கப்பல் மார்க்கமாகவோ அல்லது விமான மார்க்கமாகவோ நடத்தப்படும போதைப் பொருள் கடத்தல் வியாபாரம கண்டுபிடிக்கப்படும-

அவ்வாறு கண்டுபிடிக்கப்படும விமானங்கள் கப்பல்கள் என்பன துரத்திச் செல்லப்பட்டு கடத்தல் முறியடிக்கப்படும-

பென்டகன் அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டனர்-

இதுவரை சுமார் ஐந்து அமெரிக்கக் கப்பல்கள் போதைவஸ்து கடத்தல் முறியடிப்புக்களுக்குப் பயன்படுத்தப்பட்டன- இந்தக் கப்பல்கள் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்படும எனவும அறிவிக்கப்படுகிறது-

[எ]

## 31 பேர் பலி

அமிர்தசரஸ், மார்ச் 11

இந்துக்கள் வெகுவாக வாழும் அபோகாரில், சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர்,

இதன் எதிரொலியாக இந்துக்கள் கடந்த சனியன்று நடத்திய எதிர்ப்பு ஊர்வலத்தில் பொலீஸாருடன் மோதினர். இங்கு பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம செய்தனர். (ஏ-ரி)

# ஆப்கானிஸ்தான் ஆளும்கட்சி உறுப்பினர்கள் 5 பேர் பதவி நீக்கம்

இஸ்லாமாபாத் மார்ச் 11

ஆப்கானிஸ்தான் ஆளும மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் 5 பேர் சனிக்கிழமை பதவி நீக்கம் செய்யப்பட்டனர்-

ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லா மேற்படி 5 பேரையும பதவி நீக்கம செய்தார்-

செவ்வாய்க்கிழமை ஆப்கனில் சதிப் புரட்சி ஒன்று இடமபெற்றது- நஜிபுல்லாவைக் கவிழ்க்க பாதுகாப்பு அமைச்சர் மேற்கொண்ட சதிமுயற்சி முறியடிக்கப்பட்டது- இதன் எதிரொலியாகவே மேற்படி 5 பேரையும் நஜிபுல்லா பதவி நீக்கம செய்துள்ளார்-

காபூல் வானொலி இதனை அறிவித்தது- புரட்சியை வழிநடத்திய ஷா நவாஸ் டனாயும் பதவி நீக்கம செய்யப்பட்டுள்ளார்-

ஆளும கட்சியின் கடும போக்குக் கொண்ட தலைவர்களையே நஜிபுல்லா வெளியேற்றியிருக்கிறார்-

[எ]

நாட்டிலுள்ள

# சகல பாடசாலைகளும் 3 வகையாக பிரிக்கப்படும்

## கல்வி அமைச்சர் முடிவு

கொழும்பு மார்ச் 11

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும 3 வகையாகப் பிரிக்கப்படும-

கல்வி கலாசார தகவல் அமைச்சு இவ்வாற திர்மானித்திருக்கிறது-

ஆரமப பாடசாலை -கனிஷ்ட இரண்டாம நிலை பாடசாலை சிரேஷ்ட இரண்டாம நிலை பாடசாலை என்ற இப்பாடசாலைகள் பிரிக்கப்படும-

சகல உதவி அரச அதிபர் பிரிவுகளிலும தலா ஒரு கனிஷ்ட இரண்டாம நிலை பாடசாலை அமைக்கப்படும-

சகல ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளில் ஒரு கனிஷ்ட இரண்டாம நிலை பாடசாலையை உயர்தர பாடசாலை மட்டத்துக்குக் கொண்டு வரவும நடவடிக்கை எடுக்கப்படும-

சகல பாடசாலைகளிலும மூன்றாம ஆண்டுக்கு மேல் கற்கும மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கட்டாயம ஆக்கவா —

ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவும பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றக் கொடுக்கவுர் திட்டமொன்ற நடைமுறைப்படுத்தப்படும-

இதற்காக இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்களின் சேவையையும பெற்றக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது-

(ஐ—007)

### ஆசிரியர்களின் கருத்துக்கள் திரட்டப்படும்

கோப்பாய் மார்ச் 10

தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம பற்றி பாடசாலை ஆசிரியர்களின் கருத்துக்களை திரட்டுவதற்கு யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம நடவடிக்கை எடுத்துள்ளது-

ஆசிரியர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டு கல்வி அமைச்சின் அறிவுத்தலின் பிரகாரம எழுத்துச் சீர்திருத்தம மாணவர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது-

தமிழ் நெடுங்கணக்கில் பதின்மூன்ற எழுத்துக்களின் வடிவுங்களில் மாற்றம செய்யப்பட்டுள்ளது, இந்த எழுத்துச் சீர்திருத்தங்களை மாணவர் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்கு முன்னோடியாக ஆசிரியர்களின் கருத்துக்கள் திரட்டப்படவுள்ளன-

(ஐ-142)

## அரச அதிகாரிகளிடையேயும் திணைக்களங்களிடையேயும் ஒற்றுமை நிலவவேண்டும்

### — ஜனாதிபதி

கொழும்பு மார்ச் 11

அரசாங்க அதிகாரிகளுக்கிடையேயும திணைக்களங்களுக்கிடையேயும ஒற்றுமை நிலவ வேண்டும-

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாற கூறினார்-

கடந்த வாரம ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் வைத்து ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்-

காணிப் பகிர்வு தொடர்பாக ஆராய இந்த மாநாடு கூட்டப்பட்டது- இங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது;-

அரசாங்க அதிபர்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அரசாங்க பிரதிநிதிகளாக கடமையாற்ற வேண்டும- இவ் அரசாங்க அதிபர்கள் தங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள பிரதான பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும-

(உதவி அரசாங்க அதிபர்கள் அரசாங்க அதிபர்களின் காரியதரிசிகளாகக் கடமையாற்ற வேண்டும- அத்தோடு மாகாண சபைகளின் காரியதரிசிகளாக கடமையாற்ற வேண்டும-


ஆகவே உதவி அரசாங்க அதிபர்கள் இரண்டு கடமைகளில் ஈடுபட வேண்டும-

இலங்கையில் 273 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன இவைகளுக்கு உதவி செய்யும முகமாக மேலதிக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள்

காணி சமபந்தமான திட்டவட்டமான அறிக்கைகளை உதவி அரசாங்க அதிபர்களே தயாரித்து அளிக்க வேண்டும-

காணிப் பகிர்வுகளை மாவட்ட ரீதியில் செயல்படுத்த வேண்டும- காணிப் பகிர்வுக்கான மாவட்ட அறிக்கைகள் போதாது, ஆகவே மாவட்ட உதவி அரசாங்க காரியாலயங்கள் தெளிவான திட்டங்களை செயல்படுத்த வேண்டும-

அரசாங்க அதிகாரிகள் காணிச் செயலணிகளின் அடிப்படையிலேயே செயல்பட வேண்டும



சிலப்பதிகாரத்தில் "பத்தினி தெய்வம" என்ற தலைப்பில் அண்மையில் திருமதி இளம பிறை மணிமாறன் இந்து சமய கலாசார அமைச்சின் கேட்போர் கூடத்தில் சொற்பொழிவாற்றிய போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காண்கிறீர்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும திருமதி மணிமாறன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும காண்க.

இந்து சமய தமிழ் அலுவல்கள் கலாசார ராஜாங்க அமைச்சர் திரு தேவராஜ் திணைக்கள பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு ஆகியோரும படத்தில் காணப்படுகின்றனர்.

[படம- ஹென்ரி றொட்ரிகோ]

### புலமைப்பரிசில்: மூவர் தெரிவு

அட்டன் மார்ச் 10

அட்டன் ஹைலன்ட்ஸ் தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் ஆரமப தோட்டப் பாடசாலைகளில் வட்டவளை மவுண்ட்ஜீன் தமிழ் வித்தியாலயத்தில் மாத்திரமே மூவர் புலமைப் பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்-

இராசையா யசோதரவாசன் பாண்டியன் ஜெனட்குமாரி - இராஜேந்திரன் மரகதம ஆகிய மூவரும 5ஆம ஆண்டிற்கான புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்கின்றனர்- (ஐ—நு)

## மக்களும் பதவியும்

### முதலிடம

கொழும்பு, மார்ச் 11



தெமட்டகொட அரசினர் தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் எஸ் ஜெயராமன் புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடம பெற்றார்-

செல்வன் எஸ் சங்கர் இரண்டாம இடத்தையும செல்வன் எஸ் சுரேஸ்குமார் மூன்றாம இடத்தையும பெற்றிருக்கின்றனர்-

[ஐ—மு]

### மலாய் சங்க நிர்வாகிகள்

புத்தளம, மார்ச் 10

புத்தளம வாழ் மலாய் சமூகத்தவர்களின் "மலாய் சங்கத்தின்" வருடாந்தப் பொதுக் கூட்டம அண்மையில் நடைபெற்றது-

அல்ஹாஜ் மாஸ் பீ நலவன்ஸா இல்லத்தில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்-

தலைவர் அல்ஹாஜ் மாஸ் பீ நலவன்ஸா, துணைத் தலைவர் ஜனாப் ரீ ஹலால்தீன் ரஜப்,

பொதுச் செயலாளர் ஜனாப் கே டீ சாலே, துணைச் செயலாளர் ஜனாப் ரீ பாரிஸ் மாசோ-

பொருளாளர் ஜனாப் ரீ சரீப் இச்சில், துணைப் பொருளாளர் ஜனாப் ரீ சபீட் சாபார்.

விளையாட்டுச் செயலாளர்; ஜனாப் ரீ புத்திரா ஆப்தீன்-

நிர்வாக சபை உறுப்பினர்கள் ஜனாபா ஜீ பவுசியா முஹமமட், ஜனாபா பிந்தாரி சாபார், ஜனாபா எம பீ நலவன்ஸ, ஜனாப் ரீ கமலீன் பாபநூர், அல்ஹாஜ் எம நூலாம ஆமித், ஜனாப் ரீ மந்தாரா சாபார், ஜனாப் ஜே துவான் மஹ்ரூப்- [ஐ—241]

### இலக்கிய பேரவை நிர்வாகிகள்

கட்டுகஸ்தோட்டை, மார்ச் 10

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் முத்து சம்பந்தர் தலைமையில் அண்மையில் அனுராதபுரம் ... செயற்குழு தெரிவு செய்யப்பட்டது-

பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களா...

போலி வெளிநாட்டு

## வேலைவாய்ப்பு

### முகவர் நிலையம் முற்றுகை

கொழும்பு மார்ச் 11

குவைத்தில் தொழில் பெற் ...

பணத்தை இழந்தவர்கள் நிலைய உத்தியோகத்தர்களுடன் வாக்கு ...

## தமிழ்நாட்டைப் போல் இங்கு சீதனக் கொடுமை இல்லை

### இளம்பிறை மணிமாறன் பெருமை

கொழும்பு மார்ச் 11

குவைத்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 40 லட்சம் ரூபா வரையில் சுருட்டிக் கொண்ட போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளினால் முற்றுகையிடப்பட்டது.

கொழும்பு நகரில் இயங்கி வந்த மேற்படி முகவர் நிலையம குவைத்தில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் ஆயிரம பேரிடம நான்காயிரம ரூபா வீதம வசூலித்துள்ளாதாம.

இம் முகவர் நிலையத்திடம பணத்தை இழந்தவர்கள் நிலைய உத்தியோகத்தர்களுடன் வாக்குவாதத்தில் இறங்கியதோடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமும் முறைப்பாடு செய்தனர். இதையடுத்தே இம முகவர் நிலையம முற்றுகையிடப்பட்டது.

ஏற்கனவே இம் முகவர் நிலையம் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதிருந்தது.

இவ்வாறு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் டேவிட் சொய்சா தெரிவித்தார்.

(இ-032)

## நிட்டம்புவையில் 12 பேர் கொலை

# அரசியல் பழிவாங்கலாக இருக்கும் என்கிறது இரகசிய பொலீஸ்

கொழும்பு மார்ச் 11

நிட்டம்புவை எல்லக்கல வல்துல்ல தோட்டத்தில் மனிதாபிமானமற்ற முறையில கொலை செய்து தீயிட்டு புதைக்கப்பட்ட 12 இளைஞர் யுவதிகளின் சடலங்களும அரசியல் பழிவாங்கலானால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களாக இருக்கலாம.

பொலீஸ் மா அதிபர் திரு ஏனஸ்ட பெரேராவுக்கு இரகசியப் பொலீஸார் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்களை கைது செய்வதற்கு தீவிர விசாரணையில் இரகசியப் பொலீஸார் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம தொடர்பாக இதுவரை ஐமபதுக்கும மேற்பட்டோர் விசாரணைக்கு உட்படுததப்பட்டனர். மற்றும நூற்றுக்கும அதிகமானோர் பொலீஸாரிடம தகவல் தெரிவிக்க விருப்பம தெரிவித்துள்ளனர்.

பொலீஸ் மா அதிபரின் விசேஷ பணிப்புரையின் பேரில் நிட்டம்புவை, எல்லக்கல, வதுரகம, பட்டே-பொல, மஹர, ருக்மலே ஆகிய பகுதிகளுக்கு விசேஷ பொலீஸ் கோஷ்டியினர் சென்றனர்.

கிராமவாசிகளிடமும கொலையுண்டவர்களின் உறவினர்களிடமும பொலீஸார் தகவல்களைப் பெற்றனர்.

[ந—வ]

# இளம்பிறை மணிமாறன் பெருமை

கொழும்பு மார்ச் 11

பெண் பிள்ளைகளைப் பெற்று விட்டோமே என்று மலையகப் பெண்கள் கவலைப்படவில்லை. தமிழ் நாட்டை போல இங்கு சீதனக் கொடுமை இல்லை என்று அறிந்தேன். அதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

திருமதி இளமபிறை மணிமாறன் இப்படி கூறினார்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடந்து வரும இந்துமத பேருரைத் தொடரின் 9ஆவது நிகழ்ச்சி இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் அமைச்சர் பி பி தேவராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் "சிலப்பதிகாரத்தில் பத்தினித் தெய்வம்" என்ற பொருளில் திருமதி மணிமாறன் சொற்பொழிவாற்றினார்.

இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் வரவேற்புரை நிகழ்த்தியபோது திருமதி மணிமாறன் கடந்த 10 தினங்களாக மலையகத்தின் பல பகுதிகளுக்கும சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதாக தெரிவித்தார்.

ம பொ சியினால் "சிலம்புச் செல்வி" என்று பாராட்டப்பட்ட திருமதி மணிமாறன் பல சிறப்புகளை கொண்டவர் என்று பாராட்டினார்.

இங்கு திருமதி மணிமாறன் தமது சொந்த இடமான தரத்துக்குடியையும மலையகத்தையும ஒப்பிட்டு பேசினார். மலையகத்தின் எழிலில் தாம மயங்கியதாக தெரிவித்தார்.

அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடும வாய்ப்பு தமக்கு கிட்டியதாகவும் பெண்பிள்ளைகளை பெற்று விட்டோமே என்று அவர்கள் கவலைப்படவில்லை. தமிழ்நாட்டைப் போல இங்கு சீதனக் கொடுமை இல்லை என்றும கூறினார்.

முன்பெல்லாம அலெக்சாண்டர் - நெப்போலியன் போன்றவர்கள் தான் வீரன் என்று நினைத்திருந்தேன். ஆனால் இன்றோ நான்கு பெண் பிள்ளைகளைப் பெற்று கரை சேர்த்தவனே சிறந்த வீரன் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். அந்த வகையில் மலையகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவனும சிறந்த வீரனே" என்று அவர் பாராட்டினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அழைப்பை ஏற்று தாம அங்கு சென்றபோது இலக்கியத்தில் நளபாகம - பீமபாகம என்று ஆண்களை குறிப்பிட்டுள்ளது போல சமையற்கலையில் சிறந்த பெண்ணை குறிப்பிட முடியுமா என்ற கேள்வியைக் கேட்டு பேட்டியாளர் தம்மை திணறச் செய்ததாகவும் தாம பெண்களுக்கே சிறப்பாக உரிய விருந்தோம்பும பண்பை எடுத்து விளக்கியதாகவும மணிமாறன் கூறினார்.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் பத்தினிக் தெய்வத்தைப் பற்றி அவர் 2 மணி நேரமாக தமக்கே உரிய அழகு தமிழில் நகைச்சுவையுடன் சொற்பொழிவாற்றிய மணிமாறன் பார்வையாளர்களை களிப்புறவும சிந்திக்கவும செய்தார்.

அமைச்சரே நன்றியுரையையும வழங்கினார். விழா இறுதியில் மணிமாறனுக்கு அமைச்சு பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் மாலை அணிவித்தார். அமைச்சரின் புதல்வி செல்வி தேவராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

(ஐ—சூ)

செயல்திட்டங்களின் அடிப்படையிலேயே செயல்பட வேண்டும

தற்போது ஜனசக்தி திட்டம முன்னேற்றமடைந்துள்ளது. இத் திட்டத்தின் முன்னேற்றம திருப்திகாமாயுள்ளது.

ஜனசக்தி உதவி பெறுவோர் சுயவேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளார்கள். அத்தோடு ஆரமபத்திலிருந்தே சேமிக்கவும தொடங்கி விட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

இம மாநாட்டில் உள்ள சகல அரசாங்க அதிபர்களும அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும கலந்து கொண்டார்கள்.

(இ-455)

பின்வருமவர் கொட்டகலை கலையான உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு வீ சுந்தரலிங்கம, செயலாளர் செல்வி மயோகேஸ்வரி, பொருளாளர் திரு எப் கிறஸ்தோபர் என்பன.

நிர்வாகசபை உறுப்பினர்கள் வி ராஜகுரு, எம கந்தசாமி, எம மோகனதாஸ்.

[ஐ—139]

## நிர்வாகிகள்

சிலாவத்துறை, மார்ச் 10

சிலாவத்துறை அரசினர் முஸ்லிம பாடசாலை அபிவிருத்தி சபைச் செயலாளர், ஜனாப் எம ஏ றபீக் பாடசாலை அபிவிருத்திக்காக அறிவு சார்ந்தோர் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

அக்குழுவின் நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு.

ஜனாப் எம எம தையூப் (அதிபர்), ஜனாப் எம ஹாமீம (அரபிக் கல்லூரி அதிபர்), ஜனாப் எச் எம நசீர் (டி ஒ). ஜனாப் ஏ சி ஏ கபூர் (டி வை எஸ் ஒ), திரு ஏ அமிர்தநாதன் (டாக்டர்), ஜனாப் எம ஏ றஹீம (டாக்டர்), ஜனாப் எம எம நஜீம (சி சி), ஜனாப் எம ஹாமிது (ஸ்தாபக ஆசிரியர்).

[ஐ—]

# கொழும்பில் தமிழ் தின விழா

வறக்காப்பொளை மார்ச் 11

அகில இலங்கை தமிழ்த் தின விழா 1990ஆம் ஆண்டு மே மாதம 8 ஆம திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவை கல்வி ராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவும இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவும கூட்டாகச் சேர்ந்து நடத்தும.

இத்தமிழ்த் தின விழாவையொட்டிய பாடசாலை, கொத்தணி, கோட்டம, மாவட்டம, மாகாணம ஆகிய மட்டங்களில் போட்டிகள் நடத்தப்படும.

இதனையொட்டி தற்போது ஒவ்வொரு கல்விப் பிராந்தியத்திலும இத் தமிழ்த் தின விழாக்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கவும அவ்வப் பகுதி போட்டி ஏற்பாட்டாளர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

மாகாண ரீதியில் வெற்றி பெற்று வருபவர்களுக்கிடையேயான அகில இலங்கை மட்டப் போட்டி கொழும்பில் கோலாகலமான முறையில் இமமுறை நடத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சும இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சும அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

வாசிப்பு, எழுத்து, ஆக்கம, பாலுதல் நடனம இசை பேச்சு நாடகம, விவாதம், சொல்வதெழுதல் போன்ற பல துறைகளும் உள்ளடங்கியதாக இமமுறை தமிழ்த் தினப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் சிறுவகுப்பு மாணவர்கள் முதல் உயர் வகுப்பு மாணவர்களும கலந்து கொள்ளும் பொருட்டு நான்கு மட்டங்களில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

(இ-333)

சார்க் போட்டியை நடத்த சர்வதேச தரம் கொண்டதாக

# சுகததாச உள்ளரங்கு

# நவீனமயமாகும்

## செப்டெம்பர் மாதத்துக்குள் இறுதி வேலைகள் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 11

நவீன வசதிகளைக் கொண்ட விதத்தில் சுகததாச உள்ளரங்கை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன குரே அடிக்கல்லை நாட்டி இவ்வரங்குக்கான நிர்மாண வேலைகளை சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைத்தார்.

சர்வதேச தரம் கொண்டதாக அமைக்கப்படவிருக்கும் இவ்வரங்குக்கான நிர்மாண வேலைகள் எதிர்வரும் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் பூர்த்தியாகும்.

எதிர்வரும் ஆண்டு தென்கிழக்காசிய நாடுகளுக்கான சார்க் விளையாட்டுப் போட்டி இலங்கையில் நடத்தப்படவிருப்பதால் அதற்கு முன்னரே இவ்வரங்கு அமைக்கப்படும் வகையில் துரித கதியில் நிர்மாண வேலைகள் நடைபெறவுள்ளன.

இந்த உள்ளரங்கு அமைக்கப் பட்டதும் பாட்மின்டன், கூடைப்பந்தாட்டம், கரபந்தாட்டம் ஜிம்னாஸ்டிக், மல்யுத்தம் கராட்டே, டேபிள் டெனிஸ் பில்லியட்ஸ், ஸ்னூக்கர், ஸ்குவாஷ், குத்துச்சண்டை மற்றும் கெரம் ஆகிய உள்ளரங்கு ஆட்டங்கள் இங்கு வசதியுடன் நடத்தக் கூடியதாக இருக்கும். இவ்வரங்கில் நீச்சல் குளம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது.

இவ்வரங்கில் உள்நாட்டு உள்ளரங்கு விளையாட்டு வீரர்கள் உயர்மட்டப் பயிற்சிகளைப் பெறக் கூடியதாக பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும் சர்வதேச மட்ட உள்ளரங்கு ஆட்டங்களை இலங்கையில் நடத்துவதற்கான வாய்ப்பும் இதன் மூலம் கிட்டும்.

இவ்வரங்கு பூர்த்தியானதும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மிகச் சிறந்த உள்ளரங்குகளில் சுகததாச சர்வதேச உள்ளரங்கும் விளங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ—032)



**மரதன் ஓட்டத்தில் முதல் பரிசு**

கண்டிப் பிரதேச பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம் எச் ஏ குத்தூஸ் மரதன் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற பழைய மாணவர் ஜனாப் எம் ஜீ அனீஸுக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்—

அருகில் வித்தியாலய அதிபர் ஜனாப் எஸ் ஏ கரீம (தொப்பியுடன்) காணப்படுகிறார்—

படம்— ஏ எல் எம நிஸார் (எ—334)

# விளையாட்டு பகுதி

## இரு சமூகங்களுக்கு வெற்றிக் கேடயங்கள்

மாத்தறை, மார்ச் 10

மாத்தறை மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மொறவக்க மத்திய கல்லூரி கரபந்தாட்ட அணி வெற்றி பெற்றது—

முதலிடத்தைப் பெற்ற இந்த அணிக்கு, மாத்தறை சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி திரு முனிதாச கோமஸால் சவால் கேடயம் வழங்கப்பட்டது—

மாத்தறை உயன்வத்தை விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியை மாத்தறை பொலீஸ் - பொதுமக்கள் நலன்புரி ஒழுங்கு செய்திருந்தது—

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாத்தறை மடிஹபுபுத விளையாட்டுக் கழகத்துக்கு மாத்தறை உதவி பொலீஸ் அதிகாரி திரு எம கே சுகததாஸவால் சவால் கேடயம் வழங்கப்பட்டது—

மாத்தறை மாவட்டத்தின் சிறந்த பொலீஸ் கரபந்தாட்டக் குழுவாக மொறவக்க பொலீஸ் நிலைய கரபந்தாட்டக் குழு தெரிவு செய்யப்பட்டது— (எ—ரி—430)

## 20 பேர் பலி

அமிர்தசரஸ், மார்ச் 10

பஞ்சாப் சந்தைப் பகுதியில் சீக்கிய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலொன்றில் 20 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர்.

சீக்கிய தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு குண்டுகளையும எறிந்த போது பலர் ஓட்டமெடுத்தனர்.

## கி. ஜெர்மன் வீராங்கனையால் வேக நடை உலக சாதனை முறியடிப்பு

கிளாஸ்கோ, மார்ச் 10

மூவாயிரம மீட்டர் பெண்களுக்கான உள்ளரங்கு வேக நடை உலகச் சாதனையை கிழக்கு ஜெர்மனிய வீராங்கனை பீட்டே அன்டர்ஸ் முறியடித்துள்ளார்—

கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஐரோப்பிய உள்ளரங்கு சாம்பியன்ஷிப்பில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது—

ஒரு வருடத்துக்கு முன்னர் புடாபெஸ்ட் உலக உள்ளரங்கு சாம்பியன்ஷிப்பில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கெறி செக்ஸ்பி என்பவர் 12;01;65 என்ற சாதனையை நிலைநாட்டினார்—

இச் சாதனை 11 நிமிடம 59—36 வினாடிகள் என்ற புதிய நேரத்தால் முறியடிக்கப்பட்டுள்ளது— (எ—ரி—032)

## கிரிக்கெட்: வெற்றி தோல்வி இன்றி முடிவு

மடவளை, மார்ச் 10

மாத்தளை விஞ்ஞான கல்லூரிக்கும, கேகாலை வித்தியாலயத்திற்கும இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

அண்மையில் மாத்தளையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மாத்தளை விஞ்ஞான கல்லூரி முதலாம இன்னிங்சில் 146 ஓட்டங்களையும இரண்டாம இன்னிங்சில் 165 ஓட்டங்களையும பெற்றது.

கேகாலை மகா வித்தியாலய கோஷ்டி 256 ஓட்டங்களைப் பெற்றது. (எ—ரி—431)

## இணைச் சாம்பியன்

மடவளை, மார்ச் 10

அணிக்கு ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மடவளை யுனைட்டட் விளையாட்டுக் கழகமும, கமபளை ஹொலிடே விளையாட்டுக் கழகமும இணைச் சாமபியன்களாகத் தெரிவாகின.

அண்மையில் கமபளை வீகுலவத்தை மைதானத்தில் கமபளை "இலவன் பிரென்ஸ்" விளையாட்டுக் கழகம ஒழுங்கு செய்திருந்த அணிக்கு ஆறு பேர் கொண்ட (சிக்ஸ் ஏ சைட்) கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மடவளை யுனைட்டட் விளையாட்டுக் கழகமும், கமபளை ஹொலிடே விளையாட்டுக் கழகமும இணைச் சாமபியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. (எ—431)

## விமான சேவைகள்

எஸ் யூ 543

## வானொலி

12—3—1990

கண்டநாயனார்
7—30 அங்கும இங்கும — செய்திச்சுருள் — கே பி சோமசுந்தரம
7—50 உலகச் செய்திகள்
இரவு —
கண்ணோட்டம —
தொடர்ந்து அறிவிப்புகள்
7—00 வர்த்தகசேவை
7—30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7—45 மாகாணச் செய்திகள்
7—50 வர்த்தகசேவை
சுயமபுலிங்க பாகவதர்
10—00 தாளவாத்தியக்கச்சேரி — ரி ஜெயசுந்தரம
10—30 மெல்லிசைப் பாடல்கள்
10—45 பஜன் — லக்ஷமி சங்கர்
11—00 ஒலிபரப்பு முடிவு

## மார்ச் 12 திங்கட்கிழமை

### வந்து சேரும் நேரம

| | | |
|---|---|---|
| 0550 லண்டன், பஹ்ரேன் | ஏ ஈ | 138 |
| 0540 கராச்சி, பமபாய் | யூ எல் | 182 |
| 0700 துபாய் | ஈ கே | 802 |
| 0700 குவைத் | யூ எல் | 228 |
| 0715 சிப்போல் பாரீஸ் அபுதாபி | யூ எல் | 564 |
| 0740 பிராங்போர்ட் சூரிச், துபாய் | யூ எல் | 548 |
| 1035 பிராஙபோர்ட் | டி எப் | 3540 |
| 1140 சென்னை | ஐ சி | 573 |
| 1145 மாலைதீவு | ஈ கே | 803 |
| 1205 மாலைதீவு | யூ எல் | 102 |
| 1500 திருவனந்தபுரம | ஐ சி | 507 |
| 1515 மாஸ்கோ, கராச்சி | எஸ் யூ | 543 |
| 1545 திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1800 திருச்சி | ஐ சி | 577 |
| 2000 சிஙகப்பூர் | யூ எல் | 303 |
| 2015 மாலைதீவு | யூ எல் | 122 |
| 2040 ரொீடா. புக்குவோக்கா | யூ எல் | 457 |
| 2125 பாஙகொக் | யூ எல் | 403 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0650 மாலைதீவு, பஹ்ரேன், லண்டன் | ஏ ஈ | 138 |
| 0800 மாலைதீவு | ஈ கே | 802 |
| 0830 மாலைதீவு | யூ எல் | 101 |
| 0930 சிஙகப்பூர் | யூ எல் | 302 |
| 1000 பாஙகொக் | யூ எல் | 402 |
| 1225 பிராஙபோர்ட் | டி எப் | 3540 |
| 1235 திருவனந்தபுரம | ஐ சி | 573 |
| 1245 துபாய் | ஈ கே | 803 |
| 1300 திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 1540 திருச்சி | ஐ சி | 507 |
| 1715 கராச்சி, டஸ்கான்ட், மாஸ்கோ | எஸ் யூ | 543 |
| 1645 சென்னை | யூ எல் | 121 |
| 1840 சென்னை | ஐ சி | 577 |
| 2115 மஸ்கட் | யூ எல் | 209 |
| 2330 துபாய், லண்டன், | யூ எல் | 503 |

## மார்ச் 13 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0650 மஸ்கட் | யூ எல் | 210 |
| 0700 அபுதாபி | ஜி எப் | 4144 |
| 0800 துபாய் | ஈ கே | 800 |
| 0950 திருச்சி | யூ எல் | 132 |
| 1140 சென்னை | ஐ சி | 586 |
| 1315 சொபியா, அபுதாபி | எல் இஸட் | 595 |
| 1330 திருவனந்தபுரம | யூ எல் | 102 |
| 1600 மாலைதீவு | யூ எல் | 162 |
| 1755 பமபாய் | பீ கே | 774 |
| 2050 கராச்சி | ஐ சி | 586 |
| 2215 குவைத் | ஜே எல் | 228 |
| 2235 சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2245 சென்னை | யூ எல் | 122 |
| 2330 பாஙகொக் | எல் இஸட் | 596 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0700 திருச்சி | யூ எல் | 131 |
| 0815 அபுதாபி | ஜி எப் | 4144 |
| 0915 துபாய் | ஈ கே | 800 |
| 1015 குவைத் | யூ எல் | 227 |
| 1045 திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 1200 மாலைதீவு | யூ எல் | 101 |
| 1235 பமபாய் | ஐ சி | 586 |
| 1415 பாஙகொக் | எல் இஸட் | 595 |
| 1730 ரியாத் | யூ எல் | 271 |
| 1840 சென்னை | ஐ சி | 586 |
| 1915 சென்னை | யூ எல் | 121 |
| 2150 மாலைதீவு, கராச்சி | பீ கே | 774 |
| 2350 சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பீ கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் டி ஜீ — தாய் எயர் வேய்ஸ், பீ ரீ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம) (கு)

## 12—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — காசி விஸ்வநாத சுப்ரபாதம
5-30 பாமாலை - திருவாசகம வி செல்லத்துரை
5-45 சைவநற்சிந்தனை
5-50 கத்தோலிக்க நற்சிந்தனை
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம — தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 வாத்திய விருந்து — நிலைய வித்துவான்கள்
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 நெஞ்சோடு நெஞ்சம — மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தகசேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 பாட்டு — பூமணி ராஜரத்தினம
11-00 இசைக்கச்சேரி — ஜி என் பாலசுப்பிரமணியம
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 பக்திநெறி
6-30 விஞ்ஞானதீபம — நடத்துபவர் எஸ் கே சோமமூர்த்தி
7-00 நாடகமேடைப் பாடல்கள் — திருநீல...

8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 முஸ்லிம உலகம — வாரமஞ்சரி தொகுப்பு: அல்ஹாஜ் என் எம அமீன் அவர்கள்
8-15 பராஅத் பற்றிய பேச்சு பேசுபவர்: மௌலவி ஆர் என் ஸைபுத்தீன் ஸாஹிப்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 அஹதியா நிகழ்ச்சி நடத்துபவர்: அல்ஹாஜ் எம ஏ ஸெய்யித் முஹமமத்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்புப் ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 பேச்சு - புனைகதைகளில் பெண்கள் பிரச்சினை — திருமதி கோகிலா மகேந்திரன்
9-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு - வயலின் — துவாரம வெங்கடசாமி நாயுடு
10-45 குரல்வகை
11-00 ஒலிபரப்பு முடிவு

## 13—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — மகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம
5-30 பாமாலை — கருமாரி யமமன் திருவாசகம — பி வி ராமன்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை வழங்குபவர்: எம ரி எம தாஹிர்
5-55 பக்திப்பாடல்
6-00 வர்த்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள்
7-50 வர்த்தகசேவை
8-00 நாதவினோதம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 நெஞ்சோடு நெஞ்சம மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தகசேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 பாட்டு — பஜனேஸ்வரி சண்முகரத்தினம
11-00 வீணைக்கச்சேரி — சிட்டிபாபு
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 சைவநெறி — கு குருசாமி
6-30 மெல்லிசைப் பாடல்கள்
6-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி — மலர்வேந்தன்
7-00 இளைஞர் மன்றம — நடத்துபவர் த தேவதாஸ்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —

8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 ஜாமிஆ நழிமியா நடத்திய இஸ்லாமிய சட்டவாக்கத்தில் சுன்னா பற்றிய கருத்தரங்கின் முற்பகுதி
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 நாடகம - "அவன் கொடுத்த தீர்ப்பு" எழுதியவர்: எஸ் ஐ எம அப்துல் ஜப்பார்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலையகத்தில் கலைஞர் -

# டெலிவிஷன்

## 12—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி
5-00 செய்திகள் — சிஙகளம
5-30 வண்ணச்சோலை
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 தமிழ் பாடல்கள்
6-30 செய்திகள் — தமிழ்
6-55 தமிழ் நாடகம
7-25 கட்டபத் பவுர
8-00 செய்திகள் — சிஙகளம
8-30 போடிம
9-00 ராவ பிரதிராவ
9-30 செய்திகள் — ஆஙகிலம
10-00 பீட் பக்
10-15 ஹன் லொன்
11-05 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 கப்டன் குக்ஸ் டிராவல்ஸ்
6-30 செய்திகள் - சிஙகளம
7-00 என்ட்ரீ லிப்ரீ
7-30 மதுரசாஙக
8-00 ஏபர்ட்டி
9-00 பொன்சொயிர்
9-30 பிரெஞ்சுத் திரைப்படம
10-00 செய்திகள் — ஆஙகிலம
10-26 பிரெஞ்சுத் திரைப்படம — தொடர்ச்சி
11-15 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

## போதைப் பொருள் பாவிப்பதால்

# நாளாந்தம் 40 பேர் குற்றவாளிகளாகின்றனர்

கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் ஹெரோயின் போதைப் பொருளைப் பாவிப்பதால் நாளாந்தம் 40 பேர் குற்றவாளிகளாக மாறுகின்றனராம்!

நீதி, நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் இதுபற்றித் தெரிய வந்துள்ளது.

இவர்களுள் 90 வீதமானோர் இளைஞர்கள் ஆவர்.

போதைப் பொருள் பாவித்ததால் குற்றவாளிகளாக சிறைக்குச் சென்றோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது.

(த—007)

## 'லொட்டோ'

கொழும்பு, மார்ச் 11

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் குலுக்கப்பட்ட 64 ஆவது லொட்டோ சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

வெற்றி பெறும் எண்கள்,

**2 3 4 7**
**21 24**

1ஆம் பங்குப் பரிசு
ரூ 12 லட்சம்
(6 எண்களும் சரியாக இருப்பின்)

2 ஆம் பங்குப் பரிசு
ரூ 43, 189 சதம் 24,
(5 எண்கள் சரியாக இருப்பின்)

3 ஆம் பங்குப் பரிசு
ரூ 1,61,959 சதம் 65.
(4 எண்கள் சரியாக இருப்பின்)

## இணக்க சபையின் பொறுப்புகளினுள் கிரிமினல் குற்றவாளி கூட நுழைந்து விடலாம்

### — அஷ்ரப்

கொழும்பு, மார்ச் 11

இணக்கச் சபைகளுக்கு யாரை நியமிப்பது என்ற சட்டத்தில் இன்னும் வரையறை இல்லை. ஒரு கிரிமினல் குற்றவாளி கூட இணக்க சபையின் பொறுப்புகளில் நுழைந்து விடக் கூடும்.

இணக்க சபைகள் சரிவர இயங்காததிற்குக் காரணம் முக்கிய பொறுப்புக்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தவறான போக்குகளைக் கடைப்பிடித்தும் உரிய முறையில் மக்களோடு புரிந்துணர்வுகளை ஏற்படுத்தாததுமே ஆகும்.

அதேவேளை நீதிச்சேவை ஆணைக்குழு இருக்கின்ற போது இணக்க சபைகளையும் ஏன் ஏற்படுத்த வேண்டும்?

இவ்வாறு ஜனாப் அஷ்ரப் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் கூறினார்.

### தினேஷ் குணவர்த்தன

மக்களுக்குப் புரியக் கூடிய மொழியில் நீதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணக்க சபையில் பிறருடைய தலையீடுகளைத் தவிர்க்க குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

### லலித் அத்துலத் முதலி

இணக்க சபையினுடைய தலைவர் இரு சாரார் கருத்துக்களையும் செவிமடுத்து சமரசம் செய்து கொள்ள வேண்டும். இங்கே தான் இணக்கம் ஏற்படுகின்றது. தீர்ப்பு வழங்குவதல்ல வேலை. இது பின்னர் நீதிமன்றம் கூட செல்லலாம்.

### சிறிபால டி சில்வா

இந்த இணக்க சபைகள் தன்னிச்சையாக இருக்க வேண்டும். பலர் வரலாற்றைச் சரியான முறையில் அறியாததனால் பல தவறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

சட்டங்களை இயற்றி வைப்பதில் பயன் இல்லை. சரியான சிந்தனையோடு நடைமுறைப்படுத்த வேண்டும்.

### ரி டபிள்யூ ராஜரட்ணம்

நீதிச் சேவைகள் ஆணைக்குழு இருக்கின்ற போது இந்த இணக்க சபை ஏன் ஏற்படுத்தப்படப் போகின்றது? இது பெரும் செலவை ஏற்படுத்தும். இருந்தாலும் இந்த சட்டவரைவின் சில ஒழுங்கு விதிகளில் திருத்தம்

## புத்தளத்தில்

# கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை குறைந்தது

### தினபதி செய்தியால் பலன்

புத்தளம் மார்ச் 10

புத்தளத்தில் கட்டாக்காலி நாய்களினதும், கால் நடைகளினதும் தொல்லை என்ற செய்தியை அண்மையில் தினபதி வெளியிட்டதைத் தொடர்ந்து இச்செய்திக்கு கைமேல் பலன் கிடைத்துள்ளது.

நகரில் தன்னிச்சையாகத் திரியும் கால் நடைகளைக் கட்டுப்படுத்தி அவற்றை நகர வீதிகளில் அலைய விட வேண்டாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பகல் நேரங்களில் கால் நடைகளின் தொல்லை வெகுவாகக் குறைந்துள்ளது.

ஆயினும் ஒரு சிலர் இரவு வேளைகளில் கால் நடைகளை சுதந்திரமாகத் திரிய விடுவதாகத் தெரிய வந்துள்ளது.

இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இரவில் நகர வீதிகளில் திரியும் கால் நடைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

அத்துடன் நகரில் பெரும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கட்டாக்காலி நாய்களின் பிரச்சினையும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் முன்னுரிமை கொடுத்த செய்திகளைப் பிரசுரித்த "தினபதி" பாராட்டப்பட வேண்டியதாகும் என பலரும்



## திறப்பு விழா

நிந்தவூர் அல்மஸ்ஹர் பெண்கள் பாடசாலையில் நிலவும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்குடன், பாடசாலை நலன் புரிச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட இரு வகுப்பறைக் கட்டிடங்களின் திறப்பு விழா வைபவம் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு எச் பீ விஜேசூரிய, நாடாவை வெட்டி வகுப்பறைக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைப்பதைப் படத்தில் காண்க.

அக்கரைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி ஜனாப் ரி இபுறாலெவ்வை, நிந்தவூர் கொத்தணி அதிபர் அல்ஹாஜ் எம் எச் யாகூப் ஹசன், வித்தியாலய அதிபர் ஜனாப் எம் செயினுலாப்தீன் ஆகியோரும் படத்தில்

## அம்பாறை மாவட்டத்தில்

# கிராம சேவகர்கள் பலர் லஞ்சம் கொடுத்து பதவி பெற்றுள்ளனர்

### அஷ்ரப் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களே அம்பாறை மாவட்டத்தில் கிராமசேவகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என நான் கருதுகிறேன். அவர்களில் பலர் தொழிலை பெறுவதற்காக பெருந் தொகையான பணத்தை லஞ்சமாக கொடுத்துள்ளனர். இதற்கு ஆதாரமும் உண்டு.

எனவே, அங்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வழங்கப்பட்ட சகல கிராம சேவகர் பதவிகளையும் இடைநிறுத்தம் செய்து எதிர்கால நியமனங்களையும் நிறுத்த வேண்டும்.

திகாமடுல்ல மாவட்ட எம் பியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் இவ்வாறு கூறியுள்ளார்.

இவர் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவிற்கு இது சம்பந்தமாக கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது;

தாங்கள் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றது முதல் அம்பாறை மாவட்டத்தில் கிராமசேவகர் பதவிகள் சேர்ப்பு கொள்கைக்கு எவ்வித மதிப்பும் அளிக்காது மேற்கொள்ளப்பட்டது.

அந்த மாவட்டத்தில் ஒரே முஸ்லிம் எம் பி என்ற ரீதியில் நான் பலமுறை இந்த விடயத்தை அரசாங்க அதிகாரிடமும் பொது நிர்வாக அமைச்சரிடமும் குறிப்பிட்டுள்ளேன்.

மாகாண சபையே இந்த விடயத்தை கையாள்கிறது என அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் வழங்கப்பட்டுள்ள நியமனங்களுக்கும் மாகாண சபைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை சகலரும் அறிவர்.

உண்மை என்னவென்றால் ஆட்சேர்ப்பு கொள்கையை மதியாது பல நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு விண்ணப்பங்களை கோரியோ, பரீட்சைகளை நடத்தியோ, நேர்முகப் பரீட்சைகளை நடத்தியோ நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இதனால் முஸ்லிம் இளைஞர்களிடையே பெரும் விரக்தி ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த நியமனங்களை இடைநிறுத்தி எதிர்கால நியமனங்களை நிறுத்தியும் நியமனங்களுக்கான அடிப்படை கொள்கையை வெளியிட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின் வழங்கப்பட்ட நியமனங்கள் புதிய ஆட்சேர்ப்பு கொள்கைக்கு அமையவே வழங்கப்பட முடியும்.

இப்படி அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ—ற)

# தமிழ் எழுத்து சீர் திருத்தம்

## சபையில் அஸ்வர் கேள்வி

கொழும்பு, மார்ச் 11

தமிழ் எழுத்து சீர்திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் அரசாங்கக் கட்சி நாடாளுமன்றப் பிரதி கொரடா அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர்.

அளிப்பதற்கு அமைச்சர் தேவராஜ் சபையில் இருக்கவில்லை.

(உ—கு)

நிம்மதியான நித்திரைக்கு
இங்சற்ற

டுள்ளது-

இதன் காரணமாக பகல் நேரங்களில் கால் நடைகளின் தொல்லை வெகுவாகக் குறைந்துள்ளது-

கால் நடை உரிமையாளர்கள் தத்தம கால்நடைகளை வீடுகளில் அடைத்து வைத்துள்ளனர்.

இது விடயத்தில் முன்னுரிமை கொடுத்த செய்திகளைப் பிரசுரித்த "தினபதி" பராட்டப்பட வேண்டியதாகும என பலரும "தினபதி" நிருபருக்கு தெரிவித்தனர்.

(ஐ-241)

சபை ஏன் ஏற்படுத்தப்படப் போகின்றது? இது பெரும செலவை ஏற்படுத்தும- இருந்தாலும இந்த சட்டவரைவின் சில ஒழுங்கு விதிகளில் திருத்தம கொண்டு வர வேண்டும- இது அனைவருக்கும வசதியாக இருக்கும-

[ந—கு]

அதிபர் அல்ஹாஜ் எம எச் யாகூப் ஹசன், வித்தியாலய அதிபர் ஜனாப் எம செயினுலாப்தீன் ஆகியோரும படத்தில் காணப்படுகின்றனர்.

(ஐ-217)

றப் பிரதி கொரடா அல் ஹாஜ் ஏ எச் எம அஸ்வர்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழ் பத்திரிகைகள் கடைப்பிடித்து வருகின்றன. முதலில் தினபதியும, பின்னர் வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளும புதிய வடிவிலான எழுத்துக்களைப் பயன்படுத்தத் தொடங்கின.

ஆனால் கல்வி அமைச்சின் வெளியீடுகளிலும அரசாங்கப் பிரசுரங்களிலும பழைய எழுத்துக்களே இன்னும காணப்படுகின்றன. இதனால் மாணவர்களும மற்றவர்களும குழப்பமடைகிறார்கள்.

எனவே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமைச்சரவை அங்கீகரித்த நாளில் இருந்து, அதனை அமுல்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சர் திரு பி பி தேவராஜ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பாரா?

சபை ஒத்திவைப்பு வேளையில் அல்ஹாஜ் அஸ்வர் இப்படி கேள்வி எழுப்பினார்.

இன்னொரு கேள்வியையும அவர் கேட்டார்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம பரவுவதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம வழி செய்து வருகிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கம போன்ற இலங்கையிலும ஒரு தமிழ்ச் சங்கம அமைக்கப்படுமா? காலத்திற்கு ஏற்ப நமது தமிழை வளமபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை நமக்கிருக்கிறது. எனவே அமைச்சரின் பதிலை எதிர்பார்க்கிறேன் என்றார் அல்ஹாஜ் அஸ்வர்.

இந்தக் கேள்விக்கு பதில்

## வன்னி மாவட்டம்: ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கீடு

கொழுமபு மார்ச் 11

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கென 15 லட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது-

இத்தொகையில் விவசாய பாடசாலைக்கான விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு ஆறு லட்சம ரூபாவையும பூவரசன் மகா வித்தியலாய 2 மாடி கட்டிடத்திற்காக 5 லட்சம ரூபாவையும நமைபக் குளம மகளிர் மகா வித்தியாலய அலுவலக கட்டிடத்திற்காக 15 ஆயிரம ரூபாவையும, குருக்கள் புதுக்குளம பாடசாலைக் கட்டிடத்திற்காக 25 ஆயிரம ரூபாவையும ஒதுக்கீடு செய்ய் நடை முறைப்படுத்த வேண்டும.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கே ஆர் குகனேஸ்வரன் வவுனியா அரசாங்க அதிபருக்கு எழுதி இருக்கும கடிதம ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

(ஐ-கு)

# அரசாங்க நியமனங்கள்

## இன விகிதாசார அடிப் படையில்

கொழும்பு மார்ச் 11

நியமனங்கள் தொடர்பாக தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அரசாங்க. கூட்டுத்தாபன நியமனங்கள் திறமையும தகுதியும உடையவர்களுக்கு இன விகிதாசார அடிப்படையிலேயே வழங்கப்படும. அரசியல் தலையீட்டுக்கும செல்வாக்கிற்கும இடமிருக்காது என்று அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இதை பொது நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு யூ பி விஜேகோன் தெரிவித்தார்.

நியமனங்கள் மட்டுமின்றி பதவி உயர்வுகளும இன விகிதாசார அடிப்படையிலேயே வழங்கப்படும என்றும அவர் தெரிவித்தார்.

இன விகிதாசாரப்படி நியமனங்களை வழங்கும போது சிங்களவர்களுக்கு 75 சத வீதமும. தமிழர்களுக்கு 12. 7 சத வீதமும, இந்திய வமசாவளித் தமிழர்களுக்கு 5. 5 சத வீதமும, முஸ்லிமகளுக்கு 8 சத வீதமும கிடைக்கும.

இந்த விகிதாசாரப்படியே பதவி உயர்வுகளும கிடைக்கும.

தேசிய ரீதியில் நியமனங்களைச் செய்யும போது நாட்டின் இன விகிதாசாரமும. மாகாண ரீதியில் நியமனங்களை வழங்கும போது மாகாண இன விகிதாசாரமும, மாவட்ட ரீதியில் நியமனங்களை வழங்கும போது மாவட்ட இன விகிதாசாரமும கவனத்துக்கு எடுக்கப்படும.

இன விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் வழங்குவதோடு பரீட்சை நடைமுறைகளிலும மாற்றம செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

பரீட்சார்த்திகள் தமது பரீட்சை விடைத் தாள்களை மீள் பரிசிலனை செய்வதற்கு வசதியாக நியமன அதிகாரிகள் மீளாய்வு சபையை நிறுவுவார்கள்

தேசியக் கொள்கைக்கு அமைய இன விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் முறையாக வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க பொது நிர்வாக. மாகாண சபைகள். உள்நாட்டு அமைச்சு குழு ஒன்றை நியமிக்கும.

இந்தக் குழு புதிய நியமனத் திட்டம எப்படி நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதை ஒரு வருட காலம அவதானித்துவிட்டு வேண்டிய சிபார்சுகளுடன் அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும என்றும அமைச்சர் விஜேகோன் தெரிவித்தார்.

(உ)

## 'இயேசு ஜீவிக்கிறார்' தியான ஆராதனை

கொழும்பு, மார்ச் 11

நாட்டின் சமாதானத்திற்காகவும இனங்களுக்கிடையில் ஒற்றுமைக்காகவும இயேசு ஜீவிக்கிறார் சபையினர் நடத்தவுள்ள 12ஆவது வருட தியான ஆராதனைகள் நேற்று ஆரமபித்தன. இவ் ஆராதனைகள் எதிர்வரும 18 அம திகதி ஞாயிறு வரை ஒவ்வொரு நாளும மாலை ஐந்தரை மணி முதல் இரவு 9 மணி வரை சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறும.

வெளிநாடுகளில் இருந்தும பல போதகர்கள் கலந்து கொள்ளும இவ்வாராதனைகளில் நாட்டின் பல பாகங்களிலும இருந்கும இன மத பேதமற்ற முறையில் மக்கள் வருகை தந்து கலந்து கொள்வார்கள். இவ்வாராதனைகளை சகோதரர் எஸ் ராஜேந்திரம வழி நடத்துவார்.

(உ)

நிம்மதியான நித்திரைக்கு
தீங்கற்ற
ARS நுளம்புச் சுருளை
பாவியுங்கள்.



* ஜப்பானிய கூட்டுத் தயாரிப்பில் உருவான ஏ ஆர் எஸ் நுளமபுச் சுருளை கேட்டு வாங்குங்கள்-
* 7 மணித்தியாலங்கள் எரியக் கூடியது-
* 10 மணித்தியாலங்களுக்கு நுளமபுத் தொல்லையிலிருந்து பாதுகாக்கும தன்மையுள்ளது-
இலகுவாக பிரித்து எடுக்கக் கூடியது-

தயாரிப்பாளர்கள்-

லங்கா மொஸ்க்கிட்டோ
கொயில் கம்பெனி
(பிரைவேட்) லிமிட்.,
244 பாங்ஷால் வீதி கொழும்பு-11
தொலைபேசி- 25529/545348
நாடு முழுவதும ஏஜண்டுகள் தேவை (விலை ரூ- 15/-)

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இண்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (தெ ைக) தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 12 மார்ச் 1990.

DINAPATHI. 5, Gunasena Mawatha, Colombo 12 - P.O. Box 1613